Regd No M. 4900. 16-பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 16-10-1948 சனிக்கிழமை } மலர் 6.

## துஞ்சுவ தேனினித் தமிழா!

★

வாழ்கநம் திராவிடம் என்போம்—எங்கள்
தாழ்வெல்லாம் நீங்க வழியெனக் கொள்வோம்.
சரணங்கள்.

1. ஓதிய வேதங்கள் போதும்—அவை
நீதிக் கதையெனச் சாற்றிய தெல்லாம்
காதுக் கினிய தென்றாலும்—நம்மைச்
சாதிக் குழியினில் தள்ளியே தீரும்

2. கம்பன் கவியினைப் பாரும்—அதில்
கும்பிடற் கொத்த தமிழ்வலி யெல்லாம்
வம்பர் வடவர் வினையால்—முற்றும்
வெம்பி வெதும்பியே வீழ்ந்தன வன்றோ!

3. கலையெனக் கொள்ளுவீ ரென்றே—நம்முடை
நிலையறி யாதநம் மக்களே சாற்றின்
குலையெலாம் நடுங்குத லன்றி—அதில்
கலையின்றி மாதரைக் காட்டுத லறியோம்

4. கம்பனைப் போலொரு கயவன்—தன்னுடை
காமப் பயிற்சியைக் காட்டுதற் கென்றே
துன்பக் கதையினைத் தீட்ட—அதைத்
தூய தமிழென்று துதித்திடல் நன்றோ.

5. வள்ளலை வாழ்த்துதல் ஓயோம்—அந்த
வள்ளல் வகுத்த வழியினை வேண்டோம்
கள்ளக் கலையவை யென்றே—தம்
உள்ளம் வெதும்பி உரைத்ததை உணரோம்

6. துஞ்சுவ தேனினித் தமிழா!—இனிக்
கொஞ்ச முறங்கினும் நஞ்சென ஏறும்
வஞ்ச வடவர் குழாங்கள்—நம்மை
அஞ்ச அடக்கியே ஆள்வதைப் பாரீர்!

7. வள்ளுவன் காட்டிய வாழ்வு—அந்த
வள்ளற் பெருந்தகை வாழ்த்திய பாதை
துள்ளுகிழவர் பெரியார்—மூன்றும்
மெள்ளமெள் ளநம்மை மீட்டியே தீரும்

8. வேறுவழி யொன்று மில்லை—நம்மைக்
கூறுநூ றாக்கினும் கூவுதல் ஓயோம்
மாறுபட் டாலில்லை வாழ்வு—வாழ்க!
திராவிட மென்பதை வீரமாய்ச் சொல்லு.

—இரா. வ. பார்த்தசாரதி.

ரோஜா முத்தையா

சிறுவர் பகுதி.

# கோபாலின் லீலைகள்.

"தாதா"

'தட்டிக்கேட்க ஆளில்லாதஊரில் தம்பி சண்டப்பிரசண்டன்' என்பது போலக் கோபால் எனும் போக்கிரிப்பயல் இடைப்பாடிக் கிராமத்தில் ஒரு பொலிகாளையைப்போல் வளர்ந்து வந்தான்.

சிறுவயதிலேயே அனாதையான கோபால் மீது இடைப்பாடிக்கிராம மக்கள் இரக்கப்பட்டு, அவனைக் கிராமத்தின் பொது மகனாகக் கருதிச் செல்லங் கொஞ்சி வந்தனர். கோபால் அக்கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் நுழைந்து, அவனுக்குத் தேவையான உணவு வகைகளை உண்டு கொழுக்கவும் அநுமதித்திருந்தனர். அதற்குப் பிரதிப்பலனாகக் கோபால் அக்கிராம மக்களின் ஆடு மாடுகளை மேய்த்துத்திரிந்தான்.

வயது வளரவளர கோபாலின் போக்கிரித்தனமும் வளர்ந்து கொண்டே வந்தது. கிராமமக்களோ அதை முளையிலேயே கிள்ளி எறியாது வளர்த்து விட்டனர். அதுமாத்திரமின்றி, எல்லார் வீட்டிலும் கோபாலை ஒரு சகோதரனைப்போல் பாவித்து வந்தனர். ஆதலால், அவன் இளம் பெண்களோடுதாராளமாகப் பழகிவந்ததைக்கூடயாரும் தடுக்கவில்லை. அப்பெரியதவறுதலாலேயேபோக்கிரிப் பயலாகிய கோபால், வாலிபப் பருவத்தில் காமாந்தகாரனாகவும்மாறி, இடைப்பாடியிலுள்ள எண்ணற்ற இளம்பெண்களின் கற்பை இரகசியமாக அழித்துக்கொண்டிருந்தான்.

கடைசியாக, கோபாலின் அந்தரங்கலீலைகள் அம்பலம் ஆகிவிட்டது. இடைப்பாடியிலுள்ள பல ஆண்களும், கற்புக்கெடாத பெண்களும் கோபாலை வெறுத்தனர். ஆனால், கோபாலினால் கற்பழிக்கப்பட்ட பெண்களும், தன்மானமற்ற ஆண்களும் கோபாலைக் கடவுளின் அவதாரம் என்றும், கோபாலின் காமாந்தகார வேலைகளைக் கடவுளின் லீலைகள் என்றும் பொய்ப்பிரசாரம் செய்து, பித்தலாட்டங்கள் பல புரிந்து கிராம மக்களை ஏமாற்றி வந்தனர்.

கோபாலின் லீலைகளைப் பற்றி வெட்கப்பட்ட மக்கள் அந்நாட்டு மன்னனிடம் சென்று முறையிட்டனர். மன்னன் ஆச்சரியப்பட்டான். 'கேவலம் மாடுமேய்க்கும் அனாதைச்சிறுவன் மீது ஒரு கிராம மக்கள் கொண்ட இரக்கத்தினால், அச்சிறுவன் அக் கிராமத்திற்கே பொது மகனானான். பிறகு, அவனால், கற்பழிக்கப்பட்ட மங்கைகளின் சூழ்ச்சியினாலேயே அவனைக் கடவுளின் அவதாரம் என்று நம்பும்படியும் ஆனான்!' என்ற விவரத்தைப் பகுத்தறிந்த மந்திரிகள் மன்னனிடம் கூறினர்.

மன்னன் கோபாலைக் கொண்டு வரும்படி சேவகர்களுக்கு உத்திரவிட்டான். அதை அறிந்த கோபாலின் லீலாவினோதினிகள் கோபாலை ஒளித்து வைத்துக்கொண்டு கபடநாடகங்கள் ஆடிச் சேவகர்களையும், பாமரமக்களையும் பிரமிக்கச்செய்தனர்.

கோபாலைப்போல் முகச்சாடை உள்ள வேறு பல வாலிபர்களுக்கும் கோபாலின் ஆடை அணிகளை அணியச் செய்து அவர்களோடு கூடிக் குலாவிக் காட்டுமிராண்டிகளைப் போல் கூத்தாடித் திரிந்தனர் இடைப்பாடியிலுள்ள காமாந்தகாரிகள். அப்பெண்களுக்கு மத்தியில் காம வெறி கொண்டு சுற்றித் திரிந்த பொலிகாளைகளில் உண்மைக் கோபாலன் யார் என்று கண்டு பிடிக்க முடியாமல் சேவகர்கள் திண்டாடினர்.

ஆனால், அக் காமாந்த காரிகள் கொண்ட கணவர்களுக்குத் துரோகமாகக் கோபாலோடு மட்டும் தமது லீலைககளை வைத்துக் கொள்ளாமல், மற்றும் கோபாலின் முகச்சாடைஉள்ள பல வாலிபர்களோடும் கூடிக் குலாவுவதைக் கண்டதும் இடைப்பாடியில்உள்ள எல்லா ஆடவர்களுக்குமே கடுங் கோவம் உண்டாகிவிட்டது.

உடனே அவனவன் தத்தம் மனைவியைத் தேடிச் சென்று, கண்ட இடத்தில் நையப்புடைத்து அவனவன் வீட்டுக்கு இழுத்துக் கொண்டுபோய் விட்டனர். அப்போதேற்பட்ட கலவரத்தில் சேவகர்கள் உண்மைக் கோபாலனைக் கண்டு பிடித்துக்கொண்டு சென்றனர்.

மன்னன் கோபாலின் லீலைகளைப் பற்றியவிசாரணையைநடத்தினான். சாட்சி சொல்ல இடைப்பாடியிலுள்ள ஆண்களும், பெண்களும் அழைக்கப்பட்டிருந்தனர். அங்கு வந்த பெண்களில் பெரும்பாலோர், கோபாலின் லீலாவினோதினிகளேயாவர்! ஆண்களிலோ சிலர் தன்மானமற்றவர்களாயும், சிலர் மூடநம்பிக்கை உடையவர்களாயும் இருந்தனர்.

அதை அறிந்த அக்கொடிய கோபாலன், மன்னன் மன்றத்திலும் தனது சூழ்ச்சியைக்கையாள முனைந்தான். கோபாலின் லீலாவினோதினிகளும் அதற்கு ஒத்துழைத்தனர். ஆதலால், மன்னன் மன்றத்திலும் பல போலிக்கோபாலுகள் தோன்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன!

சூழ்ச்சி அறியாத மன்னன் தன் எதிரில் திடீரென்று தோன்றிய பல கோபாலுகளைக் கண்டு திகைத்தான்! மன்னன் மன்றத்தில் ஒரு வினாடியில் திகில் சூழ்ந்தது. மறு வினாடிக்குள் ஒரு கோபால் மன்னனின் தலையை வட்டமான ஆயுதத்தால் வெட்டி வீழ்த்தினான். அவ்வளவுதான்! கோபாலின் சூழ்ச்சியே வெற்றி அடைந்தது. அன்று முதல் கோபாலனே வேந்தனுமானான்.

இனிக் கோபாலின் லீலாவினோதினிகளைத் தடுப்பவர் யார்? அப்பெண்பேய்களுக்கு ஆனந்தம் பொங்கிற்று; ஆபாசமாக ஆடிப் பாடிக்கூடிக் குலாவிக் கும்மாளம் போட்டனர். பயத்தினால் பீடிக்கப்பட்ட ஆண்களோ! பக்தர்களாக மாறிவிட்டனர். ஆண்டவனின் அவதாரமாகிய கோபாலின் லீலைகளுக்குத் தத்தம் மனைவிகளை மனப்பூர்வமாக அர்ப்பணம் செய்து விட்டுக் கோபாலைப் புகழ்ந்து, அவன் லீலைகளை வியந்து, பஜனைபாடிக்கொண்டே மன்றத்தைவிட்டு வெளியே சென்றனர்.

# சிலை வணக்கம்!

[✱]

[பயனற்ற 'சிலை வணக்கம்' பற்றிப் பல ஆதாரங்களைக்கொண்டு தோழர் இக்கட்டுரையை எழுதியிருக்கிறார். 'பண்டித நடை' என்ற மலைப் பின்றிப் படிப்போர், பல புதிய ஆதாரங்களைத் தெரிந்து கோள்வர் என்ப துறுதி.]

✱

சிலை வணக்கமென்பது கல்லினானாதல், செம்பொன்னினானாதல், மரக்கட்டையினானாதல், மற்றெப்பொருளினானாதல் ஆக்கப்பட்ட விக்ரகத்தை வணங்குதல் என்பது பொருளாகும். அன்றியும் சிலை (விக்ரகம்)யின் முன்னர் நின்று, சிலை (வில்) போல் தம் உடலை வளைத்து அச்சிலையை வணங்குவார்க்கு இக்கட்டுரை சிலை வணக்கம் (வில் வளைப்பு) ஆகும் எனக்கொள்ளுதலும் பொருந்தும்.

நந்திராவிட நாடானது முதன் முதல் மக்களுற்பத்திக்கு உறைவிடமாயிருந்ததென்பதும், திராவிட மொழியாய தமிழே முதற்கண் பேசப்பட்டதென்பதும், திராவிட மக்களே பண்டுதொட்டு ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோராய, சித்தர், ஞானியர், யோகியர் பலரையுடையவர்களாய், அகவாழ்விலும் புறவாழ்விலும் நனிசிறந்து விளங்கியதோடு, கானிடைவாழ்ந்திட்ட அநாகரிக மக்கட்கும் நல்ல கதியினைக்காட்டி, அவர்தம்மையும் செம்மை வாழ்வெய்திட வழிகோலித்தந்தனரென்பதும் உயிர்நூல், உளநூல், மொழிநூல், வரலாற்றுநூல் வல்லார் பலராலும் ஒப்ப முடிந்தவுண்மையாகும்.

இவ்வாறு பல்லாற்றானுஞ் சிறந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த திராவிட நன்மக்கள், இஞ்ஞான்று அறியாமையின் வாய்ப்பட்டு அடிமை வாழ்வும் வறுமை நோயுங்கொண்டு, வைகலும் தேய்பிறைமதியம் போல் தேய்வுறுதற்குக் காரணமென்னையென்று ஓர்ந்து நோக்கின், இடைக்காலத்து ஈண்டுப்போந்த ஆரியப்பார்ப்பனர்களின் அனாச்சாரக் கன்மங்களைக் கைக்கொண்டு நோற்றமையினாலேயாம் என்பது, ஒரு தலையாய உண்மையாகும். அத்தகைய அனாச்சாரக் கன்மங்களில் ஒன்றே சிலை வணக்கம் ஆகும்.

கரவாடும் வன்னெஞ்சரும், உண்டி பெறும் வழிவகுத்தோருமாகிய பார்ப்பனர்கள், தம்பண்டி,(வயிறு) வளர்ப்பான் வேண்டி, சிலையைக் கொணர்ந்து நாட்டி, அதற்கு எண்ணெய்க் காப்பிட்டு, நம்மவர்களால் கொணரப்பட்ட நெய், பால், தயிர்ஆதியனவற்றால்திருமுழுக் காட்டி ஆடையணிகளால் அச்சிலையை அலங்கரித்து மலர் மாலை புனைந்து மூடமந்த்ரஞ் சொல்லி, அச்சிலையை வணங்குவார்க்கு எளிதில் முத்திகிடைக்குமென்றும், அதற்கு வழி காட்டிகள் குருக்கள்மாராகிய தாங்களேயென்றும், மேலும் எடுத்த காரியங்கள் யாவினும், எண்ணுமெண்ணங்கள் யாவினும் சித்தி நல்கவல்லது இச்சிலை வணக்கம் என்றும் பொய்ப்பறை சாற்றியதோடன்றி, எங்கு தங்கள் சூழ்ச்சி ஒரு சில பகுத்தறிவாளர்களால் வெளிப்படுத்தப்பட்டுத் தம் வயிற்றுப் பிழைப்பின் வாயில் மண் போட்டு விடுமோவென்று அய்யுற்றுக் கபட சாஸ்திரங்கள் பல எழுதி, அவை சிவனால் சொல்லப்பட்டவை, நந்தியால் நவிலப்பட்டவை, இருடிகளால் இயற்றப்பட்டவை, முனிவர்களால் மொழியப்பட்டவையென்று அவற்றிற்குத் தெய்வீகத்தன்மையும் கற்பித்து வைத்துப் போயினர். நம்மவர்கள் அவர்தம் கரவுரைகளையும் கரவு நூல்களையும் மெய்யென நம்பி, என்? தம்முயிர்க்கே உறுதி பயப்பனவென நம்பி மடிகட்டிக் கோவிலிலே மேலுடையை இடுப்பினிலே வரிந்து கட்டி, பொடிகட்டியில்லாது பூசி இரு கை கட்டி வாய்பொத்திச் சிலையை வணங்கி, பார்ப்பானுக்கும் படிகட்டி விட்டுத் தம் வாழ்நாள் முழுதும் முயற்சி குன்றி, அயர்ச்சிதுன்றி மிடியால் வாடி வறிதே மாண்டொழிந்தும் ஒழிந்து கொண்டும் வருகின்றனர்.

பண்டையரசர்களிலும் பெரும்பாலோர், முழுக்கும் மடியும் முழுநீறும் உருத்திராக்கமும் பூணூலும் முன் விளங்க, அழுக்குப்படாமல், உடல் வருந்தாமல் உண்டு கொழுத்து, நம்மவரை இழுக்குப்படுத்தித் திரியும் ஒழுக்கமில்லாப் பார்ப்பனர்களின் பொய்ச்சுருதிகளின் பகட்டுரைகளையும், அவர்தம் வேடப்பொலிவையும் பார்த்து, அவர் காட்டும் சுவர்க்கப் பராக்கை விழைந்து, புண்ய கைங்கர்யமென்று, கற்சிலைகட்குப் பெரும் பொருட்செலவில் கூடங்கள் கோவில்கள் பல எடுத்து, ககனமுட்டுங் கோபுரங்கள் எழுப்பி நித்ய வழிபாட்டிற்கும் தேர் திருவிழா முதலிய உற்சவாதிகட்கும் குருக்கண்மார்க்கும்பலவேலி நிலபுலங்கள் மானியமாக அளித்ததோடு, அக்கோவில்களிற் சிற்பவல்லுநரைக்கொண்டு, காண்போர்தங் கண்களையும் கருத்தையும் கவரும் வகையில் ஓவியங்கள் பல செதுக்கியும் வைத்துப் போயினர்.

பற்றாக்குறைக்கு அக்காலக் கவிஞர்களும் ஆரியர் தங்கரவுநூற்களைத் துருவியாய்ந்து, அவர்தஞ் சூழ்ச்சித் திறங்களை வெளிப்படுத்தும்விதரணையில்லாது அவற்றில் மூடநம்பிக்கை கொண்டு, சிலைவணக்கம் சீரிய கன்மமெனக் கடைப்பிடித்து, தலபுராணங்கள், தலமான்மியங்கள், உலாக்கள், கலம்பகங்கள், பிள்ளைத்தமிழ்கள், கோவைகள், அந்தாதிகள், சிந்துகள், பதங்கள், புகழ்மாலைகள் பல இயற்றித் தம் கவிதைத் திறனைக் காட்டிச் சென்றனர். பலபடக் கூறுவானேன்; ஆரியமதக் கோட்பாடுகளைத் திராவிட மக்களிடைப் புகுத்த உறுபெருந்துணையாயிருந்தவர் இப்புலவர்களேயென்றால், அது மிகையாகாது. இது பற்றித்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்,

"காற்றிற்போம் பதராகக் காட்சியளிக்கின்றார்கள் புலவர் சில்லோர்"

என உளம் வெதும்பி உரைத்தனர் போலும். மேலும் பல்லாண்டுகட்கு முன்னர் எழுந்த வடமொழிநூலாகிய சிவஞான தீபிகையின்

"நாநா கபட சாஸ்த்ராணி ப்ரபஞ்சகதிதானிவை
த்ருஷ்ட்வா விச்வாஸ பூர்வந்து வித்வா னபிசலத்யஹோ"

என்ற ஸ்லோகமும் இவர் கூற்றை நன்கு வலிவுறச் செய்விப்பதாகும். இதன் கருத்து:—பல கபடசாஸ்த்ரங்கள் உலகில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றைக்கண்டு, நம்பி புலவர்களும் தவறி நடந்து வருகிறார்கள் எனபதாம்.

ஆயின் இதுகாலை புலவர் பலர் 'நேற்றுச் சென்றார் நெறியே நாம் செல்வோம்' என்னாது, புதுநூற்கள் புதுக்கருத்தால் பொது வகையால் செய்து, முன்னோர் பழியை நீக்குவான் முற்பட்டிருக்கின்றனர். இதையறிந்து போற்றுவதோடு இவர்தம் அரும்பணி வளர்பிறை மதியம்போல் மென்மேலும் வளர்ந்தோங்கிப் பல்லோர்க்கும் பயன்பட்டு மிளிர்வதாக.

இவ்வாறாக, புரவலரும் புலவருமே சிலைவணக்கத்தில் பிரமைகொண்டு அடிமைபூண்டு வாணாளை வீணாளாக்கினரெனின் ஏனை ஒன்றுமறியாப் பாமரரைப்பற்றிப் பகரவும் வேண்டுமோ? "யத்யதாசரதி ஸ்ரேஷ்டஸ்தத் ததேவே தரோஜன" (செல்வாக்குடையவர்கள் எவ்வெக் கருமங்களையனுசரிக்கின்றார்களோ அவற்றையே ஏனைய மக்களும் அனுசரிக்கிறார்கள்) என்ற கீதாவாக்யம்இங்குநினைவுகூரத் தக்கது. இத்தகைய ஏதுக்களாலேயே நந்தென்னாடு முழுவதும் சிலாமயமாகத் தோற்றமளித்து வருகின்றதென்பதைமறுப்பார்யாரே?

[தொடர்ச்சி 13ம் பக்கம்]

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கதை கற்பனை.

சிறுகதை
இரண்டாம் பருவம்

# லட்சியவாதி.

போட்டி
எண் 5.

அன்புள்ள சேகருக்கு வணக்கம்!

நீ என்னை மறந்தாலும் நான் உன்னை என்றும் மறக்கமுடியாது. உன் இன்பவாழ்க்கையில் நான் ஒரு முள்செடி; உன் களங்கமற்ற தூய உள்ளத்தில் ஒரு மாசு நான். மீண்டும் பழைய நினைவையூட்டி உன் மனதைப்புண்படுத்த விரும்பவில்லை. "நீ மாந்தருள் விலைமதிக்க முடியாதமாணிக்கம்." மீண்டும்என் தவறுதலை உணர்ந்து உன் மன்னிப்பை வேண்டுகிறேன். உன் செல்வப் புதல்வி சரோஜாவுக்கு நேற்றுடன் வயது 5 ஆரம்பமாகிறது. என் முதல் குழந்தைக்கு சேகர் என்ற உன் பெயரையே சூட்டியிருக்கிறேன். இவ்வளவு நாளும் நீ இருந்த இடம் என்னால் அறிய முடியவில்லை. இங்கு யாவரும் நல்ல சுகம். நீ உன் மனைவி, குழந்தைகளுடன் நல்வாழ்வு வாழ ஆசைப்படுகிறேன். உயிருடன் இருந்தால் நாம் சீக்கிரம் சந்திக்கலாம்.

இப்படிக்கு,
உன் நண்பன் **சோமு.**

என்று கடிதத்தை வாசித்து முடித்தாள் விமலா! பக்கத்தில் உட்கார்ந்திருந்தான் சேகர். அவர்களது மூன்று வயதுச் சிறுவன் ஓடியாடி விளையாடிக்கொண்டிருந்தான் அந்த அறையிலே!

யார் அத்தான் அந்த சரோஜா?

என் மகள்!

கலியாணத்திற்கு முன்பே குழந்தை வேறு பெற்று விட்டீர்களா? என்று சிரித்தாள் விமலா.

என் மகளல்ல! பங்கஜத்தின் மகள்.

மறைந்த தங்கள் மூத்த மனைவியின் பெயரும் அதுதானே?

ஆமாம்!

அத்தான் நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே?

விமலா! பங்கஜம் இறக்கவில்லை! உயிருடன் தான் இருக்கிறாள். இன்று அவள் என் நண்பன் சோமுவின் மனைவி!

அத்தான் ஆச்சரியமாக இருக்கின்றதே!

ஆமாம் உலகுக்கல்ல, பாழும் வைதீக உலகிற்கு. கேள் விமலா! கவனமாகக் கேள்!!

காதலைப்பற்றிக் கதைகளிலே படிக்கின்றனர், நாடகம் சினிமாக்களிலே ரசிக்கின்றனர். அந்தக்காதல்கள் வீடுகளிலே நடந்துவிட்டால் கதறுகின்றனர், சீறுகின்றனர் பாம்புபோன்று! மக்கள். காதலைப் பற்றியும் காதல் மணங்கள் கலப்பு மணங்களைப் பற்றியும் மேடையேறிப் பேசும் பேச்சாளர்கள் கூட தங்கள் வீடுகளிலே அது போல நடைபெற்று விட்டால் திரையிட்டு மறைத்துவிடுகின்றனர்.

விமலா! அவைகளுக்குநான் ஒரு விதி விலக்குத்தான்.

இன்று ஸ்டேஷன் மாஸ்டராக இருக்கும்நான், அன்று ஒருசாதாரண ரெயில்வே புக்கிங் கிளார்க்கு. அதிலும் வைதீகப்பரம்பரை. எங்கள் சொந்த ஊர் விழுப்புரம். எங்கள் தந்தைக்கு ஏராளமான சொத்துக்கள் உண்டு. என் அண்ணாவிற்கு டி. எக்ஸ். ஆர். வேலை. என் அண்ணாவிற்குக் கலியாணமான மறுவருடமே எனக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அவள்தான் பங்கஜம். சுமாரான படிப்புதான். நல்ல அழகி புத்திசாலியும்கூட. எங்கள் வாழ்க்கைவளமாகவேதான் இருந்தது. விழுப்புரத்திலிருந்து நான் சேர்ந்தனூருக்கு மாற்றப்பட்டேன். அப்பொழுது என் மனைவி ஆறு மாதக்கர்ப்பிணி. எங்கள் தனிக் குடும்ப வாழ்க்கை ஆரம்பமாயிற்று அங்கே. அதுஒருசிறுகிராமம். வந்த சில தினங்களுக்குள்ளே அக்கிராமவாசிகள் அனைவருமே பழக்கமாகி விட்டனர். அந்த வருஷத்திலே எனக்குஒரு பெண்குழந்தை பிறந்துவிட்டது. அக்குழந்தைதான் என் செல்வப் புதல்வி சரோஜா. இன்று என் நண்பன் சோமு வீட்டில் வளர்ந்து வருகின்றதே அதே சரோஜாதான். நான் அந்தக்கிராமத்தில் குடியேறிய மறு வருஷத்திலே என் வாழ்க்கையில் புரட்சிகரமான பல மாறுதல்கள் ஏற்பட்டன. பஞ்சாங்கத்தை நம்பி இருந்த நான் பகுத்தறிவு வாதியானதும் அப்பொழுதுதான். காங்கரஸ் வாதியாக இருந்த நான் திராவிடக் கழகத்தவனாகியதும் அப்பொழுதுதான். எங்கள் வாழ்க்கை உல்லாசமாகக் கழிந்துகொண்டிருந்தது. ஒரு நாள் எனக்கு ஸ்டேஷன் மாஸ்டர் வேலைக்குப் பரிட்சை எழுதவரும்படி சென்னையிருந்து அனுமதி வந்தது. அதன்படி நான் ஒரு வாரம் லீவு எடுத்துக்கொண்டு என் மனைவியிடம்விடைபெற்றுப்புறப்பட்டு விட்டேன். சென்னை ஓட்டல் ஒன்றில் தனி அறை ஒன்று அமைத்துக்கொண்டேன். அன்று புதன்கிழமை பரிட்சை எழுதி முடித்து விட்டேன். சந்தோஷத்துடன் என் ஓட்டல் அறைக்கு வந்து சேர்ந்தேன். உள்ளே ஒரு கடிதம் கிடந்தது. கிழித்துப்படித்தேன். எங்களூர்ப்பக்கத்து வீட்டு கிராம முனிசீப் மாமா எழுதியது. படித்தேன், பலமுறை படித்தேன். என்னால் நம்பவே முடியவில்லை அந்தச் செய்திகளை. என் மனம் பல வழிகளில் சிதறியோடியது. இன்னும் இரண்டு தினங்கள் சென்னையில் தங்கி என் மனைவி குழந்தைகளுக்கு நல்ல விதவிதமான சாமான்களெல்லாம் வாங்கிப் போகவேண்டும் என்றிருந்த என் மனக்கோட்டை இடிந்து விழுந்தது. அன்றே அங்கிருந்து புறப்பட்டுவிட்டேன். இரவு மணி 1-க்கு என் கிராமம் வந்து சேர்ந்துவிட்டேன். கிராம முனிசீப் மாமா வீட்டுக் கதவைத் தட்டி யெழுப்பினேன். என்னை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று இரகசியமான பல விஷயங்களை என்னிடம் கூறினார். அப்பொழுதும் அப்படி இருக்க முடியாது என்றுதான் கூறினேன். என் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார் என் வீட்டின் பின்புற வாசல் பக்கம். இதோ பார்! என்று கூறி முன்புற வாசல் கதவைத் தட்டினார். மறு நிமிஷம் பின்புறக் கதவு திறக்கப்பட்டது. ஒரு வாலிப உருவம் வேகமாக வெளிவந்தது. நில் என்று அதட்டினேன், நின்றுவிட்டது

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# அம்பலம்.

## காலத்திற்கேற்றது

சென்னையில இம்மாதம் 8, 9, 10ம் நாட்களில் கூடிக் கூத்தடித்த கம்பர்விழா இருக்கிறதே, அதைத்தான் காலத்திற்கேற்றது என்று குறிப்பிடுகிறோம். அப்படியானால் என்ன காலம்? என்கிற கேள்வி பிறக்கும். இந்தக் காலம், அதுதான் 1948ம் வருஷம் இருக்கிறதே, அது சுயராஜ்ஜிய காலம்! யாருக்கு சுயராஜ்ஜியம்? பார்ப்பனர்களுக்கும் பார்ப்பன அடிமைகளுக்கும் சுயராஜ்ஜியம்! எப்படிப்பட்ட பார்ப்பனர்கள்? யார் எக்கேடு கெட்டாலும், தன் மேனி மெருகு குலையாமல் எல்லாவிதமான போக போக்கியத்தோடு, தானும் தன் இனத்தவர்களும் வாழ்வதற்கு எப்படிப்பட்ட காரியத்தையும் செய்யலாம் என்று முடிவுக்குவந்து, பார்ப்பனரல்லாதவர்களைப் பிரித்துப் பல கூறாக்கி வரும்பார்ப்பனர்கள். எப்படிப்பட்டபார்ப்பன அடிமைகள்? செல்வம், செல்வாக்கு, சிலவகை இன்பம் ஆகியவைகளையே முக்கிய லட்சியமாகக் கொண்டு, இந்த லட்சியம் நிறைவேறத் தன்னினத்தைக் காட்டிக்கொடுத்துப் பலியிட்டாவது தன் சொந்த வாழ்வில் சுகம் கண்டுவிடவேண்டுமென ஆசைப்பட்டுத் தன்னிழிவையும் தன்னினத்தின் இழிவையும் பற்றிச் சிறிதும் கவலைப்படாத பார்ப்பனரல்லாதவர்களான பார்ப்பன அடிமைகள்!

சுருக்கமாக இந்தச் சுயராஜ்ஜிய காலம் உழைப்பவனுக்குத் திண்டாட்டம்! உலுத்தர்களுக்குக் கொண்டாட்டம்! பாடுபடும் பாட்டாளி உழைத்துழைத்து உருக்குலைய வேண்டிய காலம்! கண்ணியமான வணிகன் கடையைக் கட்டிக்கொள்ள வேண்டிய காலம்! அறிஞனுக்கு அவதி! வீரனுக்கு வீண் காலம்! ஏமாற்றி வாழும் எத்தர்கள் உறிஞ்சிப் பிழைக்கப், பல உபாயங்களுக்கு விடுதலை காட்டிய காலம்! கள்ளச் சந்தையில் கொள்ளையடிக்கும் கோமான்கள் குதூகலிக்கும் காலம்! மூடத்தனம் முழு ஆட்சி புரியும் காலம்! பேடிகள் பெருமையுடன் பவனி வரும் காலம்! தன்னினத்தைக் அற்ற கயவர்கள், தருக்கோடு உலாவும் காலம்! இக்காலத்தில் இந்த மாதிரியான ஒரு கூத்து நடக்க வேண்டியதுதானே முறை, நியாயமுங்கூட.

ஏன் அப்படி என்றால் திராவிடர்களை அரக்கர்களாகவும், குரங்குகளாகவும் ஒப்புக்கொண்டு, ஜாதிக்கு ஒரு நீதி என்று கூறிய சழக்கனான ஆரிய இராமனை, ஜகத் ரட்சகன் என்ற பட்டம் சூட்டி, தெய்வத்தின் மறுபதிப்பு என்று திருகுதாளம் பேசி, கவர்ச்சிமிக்க காவிய நடையில் எழுதி, பூதேவர்களின் பாராட்டுதலை புகழ்மாலையாகச் சூடி, தன் இனம் என்றைக்குமே தலை தூக்க முடியாதவாறு செய்ய வேண்டுமென்று துணிந்த காமாந்தகாரனான கம்பனுக்கு வேறு எந்தக் காலத்தில் தான் கொண்டாட்டம்—பெருமை இருந்து விடமுடியும்? அதனால் இதைக் காலத்திற்கேற்றது என்று கூறுகிறோம்.

## "நன்கொடையாளர்கள்"

இந்த விழாவுக்குப் பணம் கொடுத்தவர்கள் எல்லாம் பெருவாரியாந் திராவிடர்கள்—கம்பர்மொழிப்படி குரங்குகள். காங்கரஸ் ஆட்சியில் உள்ள நிலைப்படி மக்களின் மடத்தனத்தைப் பெரிய கைமுதலாகக்கொண்ட வணிக முதலைகள்—மடப்பெருச்சாளிகள்.

செட்டி நாட்டு ராஜா முத்தையா செட்டியார் 1000. ஏ. எம். எம். அருணாசலம் செட்டியார் 100. தருமபுரம் ஆதினம் 101. திருவாவடுதுறை ஆதினம் 100. திருப்பனந்தாள் ஆதினம் 100. சுப்புலட்சுமிகல்கி கூட்டுக்கம்பெனி 500.

இந்த நன்கொடையாளர்களுக்கு எந்த அளவுக்குக் காவியப் பற்றும், வைணவப்பற்றும் உண்டு என்பதை நாம் விளக்க வேண்டுவதில்லை. மடத்தலைவர்கள் மூவர்—சைவ ஆதினத்தலைவர்கள் எந்த அளவு சைவ—வைணவ சமரசவாதிகளாக மாறியிருக்கிறார்கள் என்பதையும் நாம் விளக்கவேண்டுவதில்லை. மேலும் இந்த நன்கொடையாளர்களின் "உள் அந்தரங்க நோக்கம்" என்ன என்பதைப் பற்றியும், எப்படியும் தங்கள் நிலை ஒரு நோக்கம் தவிர வேறு நோக்கம் இல்லை என்பதைப் பற்றியும் நாம் கூறவேண்டுவதில்லை.

## "தலைவர்"

இந்த விழாவுக்குத் தலைவர் ஒருதிராவிடர். கம்பர் மொழிப்படி ஒரு குரங்கு! ஆச்சாரியார் அனுப்பிய வாழ்த்தின்படி ஒரு அனுமான்! அனுமான் என்றுகூறக் கேட்பதில், அலாதியான பிரியர்! அந்தப் பிரியத்தை அப்பட்டமாக அறிவிப்பவர்! கல்கியின் மொழிப்படி நவீனக் கம்பர்! பண்டிதர்களின் கருத்துப்படி "தன்ஒருவனைத்தவிர மற்றவர்கள் எல்லாம் பரம முட்டாள்கள்" என்று கருதும் தனிப்பிராணி! இலக்கிய மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் எழுத்துப்படி இணையற்ற ரஸிகமணி! அவர் அந்த விழாவில் பேசியிருக்கிற பேச்சின்படி, வெளிப்புற அழகிலேயே மெய்ம்மறந்து செயல் மறந்து பரவச மடைபவர்! அப்பரவசத்தால் உட்புறத்தின் சுயரூபத்தை உளக் கண்ணால் காணும் உரனோ, ஆண்மையோ இல்லாதவர் என்பது எவரும் கட்டக்கூடிய முடிவு.

## திறப்புரை எழுதியவர்.

இந்த கூத்தடிப்புக்குத் திறப்புவிழாச்செய்ய உடன் பட்டவர் திராவிடச்செம்மல், பிரதமர், கனம் ஓமந்தூரார். காங்கரஸ் பார்ப்பனர்களின் கூற்றுப்படி நாமம் போடுகிற சுயமரியாதை ராமசாமி. பார்ப்பனச் சாஸ்திரத்தின்படி நாலாஞ் சாதிச் சூத்திரன், அதாவது தேவடியாள் பிள்ளை! கம்பர் கண்ட கடவுட் காட்சியின்படி வானர வீரர்!

இவர் திறப்புரை ஆற்றுவதாக இருந்தும், இராம பிரான் கருணையாலோ, அனுமானின் அனுக்கிரகத்தினாலோ, ரமணரின் சோதனையோ அன்று பல்வலி உண்டாகிவிட, அந்தப்பல்வலியை முன்னமே யுணர்த்திய திருவருட் பெருக்கினால், திறப்புரையை எழுதி வைத்துவிட, அதை தமிழ்நாட்டின் எழுத்தாளிகளின் தலைவர் எழுந்து படித்தார்.

இந்தத்திறப்புரைப்பேச்சு இருக்கிறதே, அது உண்மையிலேயே திராவிடனை வம்புக்கு இழுக்கும் பேச்சுதான். மானஉணர்ச்சிஉள்ள எந்தத் திராவிடனும் இந்தமாதிரி பேசுவது 'மடத்தனம்' என்று அவர் கூறுவதுபோல, நாம் கூறா

# யார் குற்றவாளி?

## (தீர்ப்பளியுங்கள்)

★

இரவு மணி 12. உறக்கமில்லை. மூட்டைப் பூச்சியின் தொல்லை. தொழிலாளியின்குருதியைக்குடிக்க முதலாளிக்கூட்டத்தையும், உழைக்கும் மக்களையும்—வீணில் உண்டு களித்திருப்போரையும் பெற்றிருக்கும் இந்த நாட்டில், மூட்டை வேறா வேண்டும் என்ற எண்ணத்தில் உறக்கம் ஓடி விட்டது. என்னைப்பற்றியே முதலில் எண்ணம் எழுந்தது. என் ஆருயிர்த் தோழன்—மாணிக்கத்தின் வாழ்க்கைக் குறிப்பில் இடம் பெற்ற அமைச்சரைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தேன். வகுப்பில் யான் கற்பித்தவையும், அவற்றால் எனக்கே ஏற்பட்ட நிலையையும் எண்ணினேன். யான் இப்பொழுது குற்றவாளி! யான் புரிந்த குற்றங்கள்.

"1. புரோகிதரைப் புறக்கணியுங்கள்.

2. மூடநம்பிக்கையைப் போக்குங்கள்.

3. யார் கூறினாலும் நன்றாகச் சிந்தியுங்கள்.

4. தீண்டாமையைப் பற்றிய பேச்சே இனிவேண்டாம். அதைப் போக்கச்சட்டம் போடவேண்டும்.

5. சாதி என்று ஒன்று இல்லை. அந்த எண்ணத்தை மாற்றுங்கள்.

6. தமிழ் நாட்டு மக்களுக்கு முதலில் தமிழ், கட்டாயமாக்கப் படவேண்டும்.

7. கோவில்களைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்.

8. நடமாடும் கோவில்களாகவும்; கண்கண்ட தெய்வங்களாகவுமுள்ள ஏழை மக்களைப் போற்றுங்கள்."

இவற்றை யான் வகுப்பில் கற்பித்தது உண்மையே. கோவிலில் சாமி என்ற ஒன்று இருப்பதாயின் ஆயிரமிடங்களிலும் ஒப்புக்கொள்ளுகிறேன். உண்மையை ஒளிக்காதவனன்றோ தமிழன்.

"இவற்றை ஏன் கற்பித்தாய்—அதற்காக உன்னை ஏன் பள்ளியிலிருந்து விலக்கக்கூடாது? காரணங் கூறுக"

அய்யன்மீர்! வழக்கை உங்களிடம் ஒப்படைக்கின்றேன்.

வாறு தருகின்றேன். ஆராய்ந்து முடிவு கூறுங்கள்.

விவேகானந்தர், பெரியார் கட்சியைச் சேர்ந்தவரல்ல. அவர் எழுதிய கட்டுரைகளைத் தமிழ்ப் படுத்தித்தந்த பி. இராமநாதன் எம். ஏ. அவர்கள், (கனம்) கல்வியமைச்சர் மொழிபெயர்ப்பாளர். தி. சு. அவினாசிலிங்கனார் ஆகியோரும் இப்பொழுது திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்களல்லர். முறையே அவர்கள் மொழிபெயர்ப்பை உள்ளவாறு எடுத்துத்தருகிறேன். ஊன்றிப்படியுங்கள். அவை, சென்றவாண்டும் இவ்வாண்டும் பள்ளியிறுதி வகுப்பு மாணவர்களுக்குப் பாடமாக வந்துள்ளன. பாட ஏடுகளில் உள்ளன. பல பார்ப்பன ஆசிரியர்களால் கற்பிக்கப்படாமல் ஒதுக்கப்பட்டன. திராவிட ஆசிரியர்கள் விளங்க உரைத்தனர்—

1948 Tamil Test Book. S. S. L. C. பாடம் 6. பத்தி-16.

"முன்னேற்றத்திற்கு எப்பொழுதும் தடையாகவுள்ள புரோகிதர்களைப் புறக்கணியுங்கள். அவர்கள் உள்ளத்தை மாற்ற முடியாது; அவர்கள் உள்ளம் ஒருபோதும் விரியாது. அவர்கள் சென்றபல நூற்றாண்டுகளாக இருந்து வரும் மூடநம்பிக்கை, கொடுமை இவற்றினின்றும் தோன்றியவர்கள். அதனால் முதலில் புரோகிதத்தையே சமூகத்திலிருந்து களைந்து எறியுங்கள். வாருங்கள்; மனிதராகுங்கள். உங்கள் குறுகிய வளைகளிலிருந்து வெளியே வாருங்கள்; நெடுந்தொலைவு சுற்றிப்பாருங்கள்; பிறநாடுகள் எவ்வாறு முன்னேறிச் செல்கின்றன என்பதைக் கவனியுங்கள். நீங்கள் உங்களைப்போல் உள்ள மனிதரை நேசிக்கின்றீர்களா? நேசிப்பதாயின் வாருங்கள். நாம் உயரிய நோக்கங்களுக்காக உழைப்போம். பின்னால் திரும்பிப் பார்க்கவேண்டாம். உங்கள் உயிர்க்கு இனியரானவர் அழுதாலும் பின்நோக்கவேண்டாம். முன்னோக்கமே வேண்டற்பாலது."

1949—The S. S. L. C. Tamil Text Book

எதிர்கால இந்தியா—

பாடம்—4. பக்கம் 56.

யே (பிறசொற்களைக்களையாமல்) தருகின்றேன். பொருளை மட்டும் ஏற்றுக்கொள்ளுங்கள், மணியை எடுத்துக் கொண்டு உமியை நீக்கி விடுவதுபோல.

"அடுத்த அய்ம்பது வருஷங்களுக்கு இந்த மகத்தான நம் தாய் நாட்டைப்பற்றியே நாம் நினைப்போமாக. அதுவொன்றே நமது வாழ்க்கையின் முக்கிய அம்சமாக இருக்கட்டும். இக்காலத்தில் மற்றெல்லா தெய்வங்களும் நம்மனதை விட்டகலட்டும். நமது தேசம், நமது மக்கள் இவைதான் நம் உயிருள்ள தெய்வங்களாக விருக்கின்றன. இத்தெய்வத்தின் கைகளும், கால்களும், கண்களும், சரீரமும் நாடு முழுதும் எங்கும் பரவியிருக்கின்றன. மற்ற தெய்வங்களனைத்தும் இப்பொழுது உறங்கிக்கொண்டிருக்கின்றன. நம்மைச் சுற்றிலும் பரவி, எங்கும் திகழ்ந்து கொண்டிருக்கும் இவ்விராட்புருஷனை வழிபடுவதை விடுத்து, நாம் வேறு தெய்வங்களை நாடிச்செல்ல வேண்டுமா? இந்தத் தெய்வத்தை நாம் முதலில் வழிபடுவோமாக; அதற்கு மேல் மற்ற தெய்வங்களை வழிபடக்கூடிய சக்தியை நாம் பெறுவோம். அரை மைல் நகர்ந்து நடக்க வியலுமுன் அநுமனைப்போல் கடலைத் தாண்ட யத்தனம் செய்தால், அது முடியுமா? அது முடியாதகாரியமாகும். எல்லோரும் யோகிகளாக முடியுமா? அல்லாது எல்லோரும் உட்கார்ந்து தியானத்தில் ஆழ்ந்திருப்பதுதான் சாத்தியமான விஷயமா? நாள்முழுதும் உலக வாழ்க்கையிலீடுபட்டு மாலையில் கொஞ்சம் உட்கார்ந்து மூக்கைப்பிடித்துக் கொண்டால் தியானம் கைகூடிவிடுமா? மூன்றுதரம் மூக்கைப்பிடித்து சுவாசத்தை விட்டவுடனே ரிஷிகள் காற்றில் பறந்துவந்து உங்களுக்குச் சித்தியளித்து விடுவார்களா? சாதனையென்பது விளையாட்டான காரியமல்ல. இவ்விதமாகச்செய்து சித்தி பெறலாமென்று நினைப்பதெல்லாம் அறிவீனமாகும். ஆத்மிக வாழ்வின் முதல் அவசியம் சித்த சுத்தி, அதாவது உள்ளம் தூய்மையுடையதாகவிருக்கவேண்டும். அது எப்படி உண்டாகிறது? முதலில் நம்மைச் சுற்றியிருப்பவர்களைத் தெய்வமாக நினைத்து வணங்குங்கள். இந்த விராட்புருடனைப் பூசியுங்கள். நம்மைச்சுற்றியிருப்பவர்களைத் தெய்வமாக நினைத்து வழிபாடுஆற்றுங்கள். அவர்களைத்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# மாகாணத் தமிழாசிரியர் மாநாட்டில்

# மேனாள் சென்னை மேயர்.

## இந்திக்காக ஏன் இந்த வீண் விரயம்? என்கிறார் இராதா கிருட்டினனார்.

[இது, 3வது மாகாணத் தமிழாசிரியர் மாநாடு தோழர் மு. வரதராசனார் தலைமையில் நடப்பதாக இருந்தபோது, திறப்புவிழாப் பேருரையாகத் தோழர் இராதா கிருட்டினனாரால் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்ட ஒரு சிறு வெளியீடாகும். ஆனால் மாநாடு தோழர் எஸ். எஸ். அருணகிரிநாதர் தலைமையில் 14—8—48ல் சென்னையில் நடந்தது. அப்பொழுதும் தோழர் இராதா கிருட்டினனாரே திறப்புவிழாச் செய்தார். ஆ-ர்.]

★

அன்புநிறைந்த ஆசிரியத்தோழர்களே!

தமிழகத்தின் எதிர்காலச் சிற்பங்களைத் திறமையுடன் சமைத்துவரும் சிந்தனைச் சிற்பிகளாகிய உங்கள் அனைவரையும் ஒரு சேரக் கண்டு மகிழும் பேறுபெற்றமைக்கு உண்மையிலேயே பெருமகிழ்ச்சி அடைகின்றேன். உங்கள் எல்லோருக்கும் என் அன்புகலந்த வணக்கம்; வாழ்த்து.

### குறைகள் முற்றும் நீங்கவில்லை

தமிழாசிரியர் மாநாடு நடைபெறுவது இது முதன் முறையல்ல. பல முறை இம்மாநாடு கூடியது. தமிழாசிரியர்களின் குறைகளைத் தெளிவுபடுத்தி, அவற்றை நீக்குவதற்கான முயற்சிகளைத் தேடிற்று. நற்காலமாக நம்முள் இருந்த ஒற்றுமையாலும் கட்டுப்பாட்டினாலும் நாம் முக்கால் பங்கு வெற்றி அடைந்தோம். தமிழாசிரியர்களின் நிலை ஓரளவு உயர்ந்தது; உயர்ந்து வருகிறது. அரசியலாரும் நம் கட்சியை ஒப்புக்கொண்டார்கள்; ஓரளவிற்கு நமக்குச் சலுகை காட்டினார்கள். ஆனால், நம் குறைகள் முற்றும் நீங்கிவிடவில்லை. இவ்வளவோடு நம் குறைகள் தீர்ந்துவிட்டன என்று எண்ணிவிடலாகாது. நீக்க வேண்டிய—போக்கவேண்டிய குறைகள் இன்னும் எவ்வளவோ உள்ளன.

### தமிழன் அவாவும் கடமையும்.

செந்தமிழ் நாடு என்பது பாரதியார் காதில் இன்பத்தேனைச் சொரிந்தது. அத்தகைய நாட்டுமொழியாம் செந்தமிழைப் போதிக்கும் ஆசிரியர்களின் நிலையையும் கண்ணியத்தையும் அதிகப்படுத்துவது தமிழனின் முக்கிய கடமை. ஆங்கில மோகத்தில் மூழ்கிக் கிடந்த தமிழனைத்தட்டி எழுப்பியவர்கள் தமிழாசிரியர்கள். தமிழன், நாடு கண்டு, அரசு அமைத்து, ஆட்சி நடத்தும் காலம் தொடங்கிவிட்டது. குமரி முதல் வேங்கடம் வரை தமிழன் ஆட்சிக்கு உட்படுத்தவேண்டும். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்ய வேண்டும். இதுவே இன்றைய தமிழன் அவா; கடமையுங் கூட.

### மூன்று மொழி வேண்டுமோ?

இந்திய நாடு விடுதலை பெற்றுவிட்டது. புதிய இந்தியாவில் தமிழன்நிலை என்ன? தமிழின் நிலைதான் என்ன? தமிழ், பள்ளிக்கூடங்களில் முதன்மொழி ஆக்கப்பட்டதை நாம் அனைவரும் வரவேற்கிறோம். ஆனால், வெறும் பேச்சளவில் தமிழ் முதன்மொழி யாக்கப்படுவதை நாம் விரும்பவில்லை. ஆங்கிலத்திற்கு இன்னும் பிரதான்யம் அளிக்கப்பட்டுள்ளது அனைவரும் அறிந்ததே. முதன்மொழியாகிய தமிழுக்குப் போதிய அளவு போதனைக் காலம் அளிக்கப்படவில்லை. வாரத்திற்கு ஆறு கால அளவைகளே தமிழ்ப் போதனைக்குக் கொடுக்கப்பட்டுள்ளன! முதன்மொழி என்பதன் பெயர் இதுதானா? முக்கியமாகத் தென்னாட்டவர் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுள்ளது.—இனி தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மூன்று மொழிகளைக் கற்கவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். ஆனால், இந்தியாவிலுள்ள இதர மாகாணங்களிலோ இந்தி முதல்மொழியாகவும், ஆங்கிலம் இரண்டாவது மொழியாகவும் விளங்கும். தமிழ்நாட்டிலோ வெனில், தமிழ் முதன்மொழி; ஆங்கிலம் இரண்டாவது மொழி; அத்துடன் மூன்றாவது மொழியாக இந்தியும், முதலாவது பாரத்தி லிருந்தே கற்கவேண்டும். மேலைநாடுகளில் ஒவ்வொரு நாடும் தனது நாட்டுமொழியோடு மற்றொரு அய்ரோப்பியமொழி கற்கவேண்டும் என்ற நியதி உண்டு: இத்தகைய அய்ரோப்பியமொழி கற்பது, அகில உலகத் தொடர்புக்கும் பிறநாடுகளுடன் வியாபாரம் செய்வதற்கும் ஏதுவாயிருந்தது. தென்னாட்டைப் பொறுத்தவரை தமிழ் மாகாண மொழி; இந்தி நாட்டுமொழி; அய்ரோப்பிய மொழி ஆங்கிலம். ஆங்கிலமொழி, இந்தியாவிலுள்ள இதர மாகாணத்தவருக்கு அவசியமென்றால், அது தென்னாட்டவருக்கும் மிக அவசியமாகும். ஆகவே, மாணவர்களுக்குச் சிறு வயதிலே தமிழோடு ஆங்கிலம் கற்பிக்கப்படுவது நல்லது. இந்நிலையில் கீழ் வகுப்புக்களிலேயே இந்தி கட்டாயபாடமாக வைக்கப் போகிறார்கள் என்பது நம்கவனத்திற்குரியது. இச்செயல் இளம் மாணவர்களுக்குப் பெரும் தீங்கிழைப்பதாகும்; நாட்டுக்குக் கேடு தருவதாகும். வேண்டுமானால் மேல் வகுப்புகளில் விருப்ப பாடமாக இந்தியை வைப்பது நல்லது. நம் மாகாணத்தவரும், வங்காளிகளும் மூன்று மொழிகள் கற்பதை அடியோடு ஆட்சேபித்துள்ளனர்; எதிர்த்து வருகின்றனர். பலமொழிகள் கற்பதால் ஏற்படும் நன்மைகளை நான் நன்கு அறிவேன். ஆனால் இப்போதுள்ள நாட்டு நிலையில்—கல்வியில் மிகவும் பிற்போக்காக மக்கள் உள்ள நிலையில்—மூன்று மொழிகளைக் கற்கும்படி பிள்ளைகளைக் கட்டாயப்படுத்துவது, மாணவர்கள் மூளையைக் குழப்பி அவர்களை ஒன்

[தொடர்ச்சி 11ம் பக்கம்]

---

செய்தற்கேற்றது. உலகில் வாழும் மனிதர்களும், இதர சீவசத்துக்களும் தாம் நமது தெய்வங்கள். முக்கியமாக, நமது தேசமக்களே நமது முதல்வழிபாட்டிற்குரியவர்கள். ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்வதையும் பொறாமைப் படுவதையும் விட்டு, இத்தகைய உயர்ந்த பரிசுத்தமான மனப்பான்மையை மேற்கொள்வீராக.''

இவ்வளவும் விவேகானந்தர் எழுதியது. அவரது அடியில்தோன்றிய சிஷ்யர் கனம் திரு. தி. சு. அவினாசியார் மொழிபெயர்த்தது. பத்தாம் வகுப்புப் பாடஏட்டில் உள்ளது. இவற்றை எடுத்து மொழிந்து உண்மையை மேடைகளில் எடுத்துக்கூறினால் உலைவைப்பது; ஓலை கிழிப்பது என்றால் முதல் குற்றவாளி யார்?

எழுதிய விவேகாநந்தரா?

மொழிபெயர்த்த அவினாசியாரா?

கற்பிக்கும் ஆசிரியர்களா?

எடுத்துரைக்கும் இளைஞர்களா?

இவற்றை வெளிப்படையாகப் பச்சையாக யாவருக்கும் புரியும் வகையில் எழுத்து வாயிலாகவும்-பேச்சு வழியாகவும் தொண்டாற்றி வரும் கழகமா?

அறிஞர்களே தீர்ப்பு அளியுங்கள்.

''ஒரு தமிழாசிரியன்''

# குடி அரசு

16—10—48 சனிக்கிழமை.

## வரவேற்கின்றோம்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் துவக்கப்பட்டதும் நம் அருமைத் தளபதி தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் உண்மையாகவே தளபதியுடன் சர்வாதிகாரியுமாக ஆகி இந்திப் போராட்டத்தை நடத்த முன்வந்தார். திராவிடர்கழக மத்திய கமிட்டியாரும் மிக மனக்களிப்புடன் வரவேற்று போரை நடத்த அனுமதித்தார்கள். அந்தப்படியே இந்தி எதிர்ப்புப் போர் நடந்து வந்தது. இடையில் ஹைதராபாத் தொல்லை வந்து நம் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்திவைத்தோம். தொடர்ந்து பள்ளி விடுமுறைகளும் பரீட்சைகளும் இருந்து வருகின்றன. இதற்கிடையில் நமது தனி மாகாண மாநாடு நடத்தி, மீண்டும் போர் துவக்குமுன், போரின் தத்துவத்தை விளக்கி, இன்னும் தீவிரமான முறையில் புதுமுறுக்குடன் போர் நடத்தத் திட்டமிட்டுக் காரியத்தில் இறங்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கு ஆகவே மாநாடு நடைபெறுகிறது. இந்த மாதிரியான சந்தர்ப்பத்தில், போராட்டத்தின் சர்வாதிகாரியாக விளங்கும் தளபதி அண்ணாதுரை அவர்களையே ஷ்டி தனி மாநாட்டிற்கும் தலைவராக இருந்து வழிகாட்டி நடத்திச் செல்லும்படி, மாநாட்டின் வரவேற்புக் கமிட்டியார் தளபதியை தேர்ந்தெடுத்திருப்பதானது மிக மிகப் பொருத்தமான காரியமாகும்.

அதுபோலவே நமது "குத்தூசியாரும்" ஒரு எழுத்துப் போராட்டத்தளபதியாவார். அவரது எழுத்தைக்கண்டே சர்க்கார் மிரண்டு "விடுதலை"க்கு ரூ 2000 ஜாமீன் கேட்டார்கள். ஆனால் அதன் விளைவு மக்களிடையேபுத்துணர்ச்சியை ஊட்டி இரண்டாயிரமாகேட்கிறார்கள்; இதோ! பதினையாயிரம் தருகிறோம் என்று சங்கநாதம் செய்து குத்தூசியாரிடம் இருக்கும் அன்பைக்காட்ட பொதுமக்கள் வெள்ளித் தோட்டாக்களை அள்ளி வீசினர் "விடுதலை" நிலைத்திற்கு. அந்தக் "குத்தூசியாரை"த்தான் மாநாட்டுத்திறப்பாளராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆம்! அவர்தான் நமது தோழர் எஸ். குருசாமி அவர்கள். இருவரும் சிறைசென்று மீண்டவர்கள். இவ்விருவர் செயலையும், எழுத்தையும் கண்டு மிரண்ட சர்க்கார் இம்மாநாட்டில் அவர்களது பேச்சுக்களைக் கேட்டு என்ன செய்யப் போகிறதோ என்று நினைத்தாலே, வெகு வெகு சீக்கிரத்தில் நமது தோழர்களுக்கெல்லாம் சர்க்கார் "விருந்து" (சிறை வாசம்) கிடைக்கும் என்று தான் நாம் எதிர்பார்க்கிறோம்.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களும் நகைச்சுவை மன்னர் என். எஸ். கே. அவர்களும் இம் மாநாட்டில் கலந்து கொள்ளுவது மற்றொரு பெருஞ் சிறப்பாகும். தமிழ்மணமும் கலைமணமும் வீச இவ்விரு அறிஞர்களும் இருபடங்களைத் திறந்து வைக்க ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். திராவிடப் பெருங்குடி மக்களின் சார்பாக பேரன்போடு இவர்களை வரவேற்கின்றோம்.

பொதுவாகச் சொன்னால், அடுத்த வாரம் நடக்கப்போகும் தனி மாநாடு, துள்ளிக்குதித்துக் கொண்டு வருகிற இளங்காளைகள் நிரம்பிய சமுத்திரமாகக் காட்சியளிக்கும் என்று எண்ணி, எண்ணிப் பூரிப்படைகிறோம். பெரியார் அவர்கள் கூறுவதுபோல் அத்தனை காளைகளும் பலிக்கிடாய்களாகச் சிறிதும் அஞ்சமாட்டார்கள் என்பது முக்காலும் உறுதி!

அதே சமயத்தில் நமது இயக்கப் பிரமுகர்களும், பெரியோர்களும், முக்கியஸ்தர்களும் மற்றும் பல கனவான்களும் மாநாட்டுக்கு வந்து வாலிபர்களை உற்சாகப்படுத்தியும், வாழ்த்தியும் போராட்டத்திற்கு வழியனுப்பிக் கொடுக்க வரவேணுமாய் மிகப் பணிவோடு வேண்டிக் கொள்ளுகிறோம்.

கடைசியாக, நமது தாய்மார்கள் மாநாட்டுக்கு வந்து "எங்கள் அருமை மக்களே! தம்பிமார்களே!! சூத்திரன் என்றால் வேசி மகன் என்று பொருள் கூறுகிறார்கள். அதனால் உங்களைவிட எங்களுக்குத்தான் வேசி, தாசி என்ற பழிச்

# இந்தி படிக்க வேண்டும்!

## இல்லாவிட்டால் பள்ளியிலிடமில்லை.

### கல்வி மந்திரியாரின் விளக்கம்.

திருநெல்வேலி அக். 2

திருநெல்வேலி ஜில்லா ஆசிரியர்கள் மாநாட்டில் கல்வி மந்திரிதோழர் அவினாசிலிங்கம் அவர்கள் கலந்து கொண்டபோது கல்வி மந்திரியார் பல கேள்விகளுக்குப் பதில் அளித்திருக்கிறார். ஒரு கேள்வி பின்வருமாறு கேட்கப்பட்டது.

கேள்வி:— இந்தியை இஷ்டபாடமாகக்கூட படிக்கமாட்டேன் என்று ஒரு மாணவன் சொன்னால் அவனை என்ன செய்வது?

அமைச்சரின் பதில்:— வெளியே அனுப்பிவிட வேண்டியது.

இந்தச் செய்தி 13-10-48ம் நாள் தினமணி (வெளியூர் 14-10-48) 6ம் பக்கம் 3வது கலத்தில் கேள்விகளுக்குப் பதில் என்ற உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தி இஷ்ட பாடமா? கட்டாய பாடமா?

## ஈரோட்டுத் தனி மாநாட்டின்

# தலைவர்

## தளபதி அண்ணாதுரையவர்கள்

திறப்பாளர்:

## ஆசிரியர் எஸ். குருசாமியவர்கள்.

திருவள்ளுவர் படத்திறப்பு:

## பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்.

திராவிட நாடு படத்திறப்பு: தமிழ்ப் பெரியார்

## திரு. வி. க. அவர்கள்.

மனோன்மணீயம் சுந்தரனார் படத்திறப்பு:

நகைச்சுவையரசு

## என். எஸ். கே. அவர்கள்.

மற்றும் தியாகராயர், பன்னீர் செல்வம், நாகம்மையார், அர்ச்சுனன், தாளமுத்து நடராசன் ஆகியோர் படங்களைத் தோழர்களான டி. பி. வேதாசலனார், கே.வி. அழகிரிசாமி, எ. சித்தையன், சி. டி. டி. அரசு, ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் திறந்து வைப்பார்கள்.

"மகாத்மா தொண்டன்" நாடகத்திற்குத் தோழர் கே. கே. நீலமேகம் அவர்களும், "தூக்குமேடை" நாடகத்திற்கு தோழர் குருசாமி குஞ்சிதம் அவர்களும் தலைமை தாங்குவார்கள்.

பகுத்தறிவுச் சித்திரக் காட்சியும் உண்டு.

இவை, 14—10—48ம் நாள் மாலை 4 மணிக்கு மாநாட்டுக் காரியாலத்தில், வரவேற்புக் குழுத்தலைவர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமியவர்கள் தலைமையில் கூடிய வரவேற்புக் கமிட்டிக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன.

இக்கூட்டத்திற்கு பெரியார் இராமசாமியவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் வந்திருந்தனர்.

சொல் ஏற்படுகிறது. எங்களுக்குள் இருக்கும் இழிபட்டத்தை ஒழிக்க உங்களோடு நாங்களும் சேர்ந்து போரில் இறங்க, இதோ, வருகிறோம்" என்று கூற விரைந்தோடி வாருங்கள் மாநாட்டுக்கு இறந்தவோம் போரில். இரண்டில் ஒன்று! எதுவானாலும் லாபமே. வாருங்கள்! வாருங்கள்!! என்று அன்புடன் அழைக்கிறோம்.

★

### மதியழகன் வெற்றி பெற்றார்.

தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் அண்மையில் நடந்த அண்ணாமலைப் பல்கலைக்கழக பி. ஏ. தேர்வில் வெற்றி பெற்றார் என்கிற செய்தியை மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம்.

பள்ளிஹாஸ்டலில் தங்கிபடிக்க அனுமதியின்றியும், பரீட்சைக்குச் சில நாள் முன்பு சிறைபுகுந்தும், அடிக்கடி கோர்ட்டுக்குப் போய்வர வேண்டிய அலைச்சல்களுக்கிடையே, பரீட்சையன்றுகூட கோர்ட்டுக்குப் போய் வந்து இந்த வெற்றியையடைந்திருக்கிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

★

### திராவிடர் கழக தனி மாகாண மாநாடு, ஈரோடு.

★

ஈரோடு, 13-10-48.

மாநாட்டுக்கு வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றது. பெரியார் அவர்களும், தளபதி அண்ணாதுரை அவர்களும் வேலைகளை மேற்பார்வை பார்த்து வருகின்றனர். மாநாட்டுக்கு டிக்கட்டுகள் அடித்தாய் விட்டது. டிக்கட் வேண்டுவோர் உடனே பணம் அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

தங்களன்பன்,
எஸ். அப்பாவு.
விளம்பர அதிகாரி.

★

### ஈரோடு மாகாண மாநாடு.

ஈரோடு, 14-10-48.

மாநாடு வேலைகள் மிகச் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது. வெளியூர் தோழர்களுக்கு தங்குவதற்கு இட வசதி செய்யப்பட்டுள்ளது.

வெளியூர் தோழர்கள் தயவு செய்து, இங்கு வரும்பொழுது படுக்கையுடன் வர வேண்டப்படுகிறார்கள். கூட்டம் அதிகம் எதிர் பார்க்கப்படுகின்றபடியால் மாநாடு நுழைவு, டிக்கட் வழங்குதல் ஆகிய இடங்களில் க்யூ முறை ஏற்பாடு செய்யப்படும். ஆகவே தோழர்கள் க்யூ முறை ஏற்பாட்டில் ஒழுங்காகவும், கட்டுப்பாடாகவும் நடந்து கொள்ளவேண்டும். தயவுசெய்து பொருளாளர் அவர்களுக்குப் பணம் அனுப்பி, டிக்கட்டுகளை முன்னதாகப் பெற்றுக் கொள்ளவும்.

தங்களன்பன்,
எஸ். அப்பாவு.

★

### திருமணம்.

17—10—48 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு தோழர்கள் சிவசூரியன்—பழனியம்மாள் வாழ்க்கையொப்பந் தம்குல்லலக்குண்டு மணமகள் இல்லத்தில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் முன்னிலையில் நடைபெறும்.

### செல்வமணி.

ஈரோடு 9-10-48

தோழர் நா. மு. மாணிக்கம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் அழகம்மையவர்கள் 19—9—48ம் நாள் ஈன்ற ஆண் மகவிற்கு இன்று திராவிடத் தந்தை பெரியாரவர்களால் செல்வமணி என்ற பெயர் சூட்டப்பெற்றது.

## யோசிக்கிறார்கள்.

"யாரது? அவினாசிலிங்கமா! வாங்க, வாங்க, உங்களைத்தான் எதிர்பார்த்துக்கிட்டு இருந்தேன்"

"என்ன சாமாச்சாரம்"

இன்னிக்குப் பேப்பர் படிச்சிங்களா"

"படிச்சேன். விடுதலையைத் தானே சொல்றீங்க"

"ஆமா, கவனிச்சிப் படிச்சிங்களா"

"அதைப் படிச்சிட்டுத்தானே ஓடோடியும் வந்தேன். இந்த மார்தக் கடைசியிலே இந்தி எதிர்ப்பை மறுபடியும் துவக்குறாங்களாமே. அதுக்காக ஸ்பெஷல் கான்பரன்ஸாம். பெரிய தொல்லையா இல்லே இருக்கும் போல இருக்கு"

"என்ன செய்யறது மிஸ்டர் அவினாசிலிங்கம்! ஹைதராபாத் சண்டை இன்னும் கொஞ்ச நாளைக்கு நீடிச்சி நடந்ததுண்ணா, இந்தி எதிர்ப்பே மறந்துடுவாங்கன்னு நினைச்சேன். அது அவர்களுக்குச் சாதகமாத் திடீர்னு நின்னுபோச்சு. இப்போ என்ன செய்யறதுன்னே புரியலையே"

"இந்தத்தடவை நிலைமையைச் சமாளிக்க முடியாது போலல்ல இருக்கு"

"எல்லாம் உங்களால்தான். நீங்க செஞ்ச வேலையினாலே மற்ற மந்திரிகளும் ரொம்பக் கஷ்டப்படறாங்க. வெளியூர்களுக்கு 'டூர் ப்ரோகராம்' கூடப்போட மாட்டேன்றாங்க. கோர்ட்டுகளிலே சப்மாஜிஸ்டிரேட்டுங்களெல்லாம் திக்குமுக்காடறாங்க"

"நான் என்ன சார் செய்ய. நம்ம பத்திரிகை எல்லாம் உதவி செய்யும்னு நினைச்சேன். தொழிலாளர் ஸ்டிரைக், என். ஜி. ஓ. ஸ்டிரைக் இதுகளை அடக்கினது போல அடக்கும்னு நினைச்சேன். இந்தக் கருப்புச்சட்டைக்காரர்கள் தான் ஒண்ணும் அஞ்சமாட்டேன்றாங்களே"

"மிஸ்டர் அவினாசிலிங்கம்! சென்னைக் கார்ப்பரேஷன் தேர்தலுக்குப்பிறகு எனக்கு எப்படியோ இருக்குது. இனி ஜனங்களை ஏமாத்த முடியாது. இந்தி விஷயத்திலே நம்ப ஏதாவது மாறுதல் செஞ்சுதான் ஆகணும்"

"எப்படிங்க மாத்துறது. இந்தி எதிர்ப்புக்காரர்களுக்கு இளக்காரமாயில்லே போயிடும். நாளைக்கு நம்ப பத்திரிகைகளே நமக்கு எதிராப் பாயுமே. அதுக்கில்ல பார்க்கவேண்டியதாயிருக்கு"

"அதைத்தான் நானும் யோசிக்கிறேன்.

இதுபோன்ற உரையாடல், முதலமைச்சர் ஓமந்தூராருக்கும் கல்வி அமைச்சர் கனம் அவினாசிலிங்கனாருக்கும், அண்மையில் பெரியாரவர்கள் சிதம்பரத்தில் ஆற்றிய நீண்ட சொற்பொழிவைப் படித்த பின்னர் நடந்திருந்தால் அது ஆச்சரியமில்லை. ஒரு வேளை நடந்தே யிருக்கலாம். யார் கண்டது? "பித்தன்"

## பெருங்குடிச்சாமி.

[பெருங்குடி-சென்னை அடையாற்றுப் பக்கமுள்ள ஓர் ஊர்.]

அடேய்! கோபம் வருது. கோபம் வருது. புடிக்காதேடா என்னை. (பிடிக்காதிருக்கும்போதே) உடுடா—என்னை யாரென்று நினைச்சிங்கோ. ஆங்கார, ஓங்கார, ரீங்கார, அய்யுங்கிளியும் பட்டு, சௌவும், சௌவும் பட்டு, சகல அண்டசராசரங்களையும் ஆட்டிவைக்கும் அடங்காப் பிடாரியடா—அடங்காப்பிடாரி—

தாயே கும்புடுரோம்—கும்புடுரோம்—

என்னை மறந்து பூட்டிங்களாடா—ஊம்-ம்-ம "என்னை அவமரியாதை பண்ணுறீங்கோ"--அவமரியாதை பண்ணுறீங்கோ-(மூலச்சூடுமிகுது-கோபம் வருது) இரண்டு வாரமா என்னைப் பட்டினி போட்டிட்டிங்கோ—என்னால் குந்தியிருக்கவே (கல்லாய்) முடியலே. கோபம் வருது. முன்னே எனக்காக தனி லைசன்ஸ் கொடுத்திருந்தீங்க—தாராளமாக—ஏராளமது வுண்டு—பேராளம் வரையிலும் நீட்டிப்படுத்திருந்தே—இப்போ போறயெடமெல்லாம், இல்லை, இல்லை எனக்குகருப்புக்கொடியை நீட்டிக் காட்டுறாங்க. போதாக்குறைக்கு நீங்களும் சேர்ந்துகிட்டு என்ன ஓட்டப் பாக்குறீங்களா? அழிச்சிடுவே; ஆட்டிப் படைச்சிடுவே, சபிச்சிடுவே- மரியாதையாயிருங்க. நான் வந்தேனே, நீங்க எழுந்திருச்சீங்களாடா? பெண்களெல்லாம் எழுந்திருக்கப் பேசாமலிருந்தீங்களே—நினைச்சா குமுறுதே—டேய்—You must stand up—(பெஞ்சஇல்லை)—(இந்த சாமிக்கு ஆங்கிலம்தெரியும்) எல்லோரும் எழுந்திருந்து மரியாதைசெலுத்த (ஆ)சாமிமனம் குளுந்தது.—(சிலர்குந்தியே இருந்தனர்—சாமிக்குத் தெரியாது)—சூடு அடங்கிற்று.

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே-ஆனந்த சுதந்திரம் அடைந்து, விட்டோமென்று" ஒரேஆட்டம் (ஆ) சாமியும் கூடவே ஆடி அமர்ந்தது.

திடீரென ஒருத்தரைப்பிடித்து சாமி உலுக்கிற்று — அடேடே! உப்புமா வேகலே—வேகலே—என்டா?

ஈரவிறகு; அவசரத்தில் இறக்கிட்டோம் தாயே! பொறுத்துக்கோ, இனிமேல் அளியப்படைக்கிறோம். அன்னையே! என்று வேண்டிக்கொண்டார்கள்—

அப்படியே ஆடிக்கொண்டு பெண்களைப்பார்த்து, வைக்கிற வைக்கிற இண்ணிங்களே நீங்க வைக்காம போனிங்களே என்று வாத்தியார் சாமி கேட்டுது.

வந்த (ஆ) சாமிக்கு இதுபுரியில.

இந்தியை வைச்சுட்டுந்தாயே-இனி ராணுவத்துக்கும் ஏற்பாடுசெய்யுறோந் தாயே என்று வேண்டிக்கொள்ள—அந்த சாமி இன்னொருத்தரைப் பிடிச்சி ஆட்டுச்சி—

அடேய் கள்ளுக்கடையை மூடுனியே என்டா காப்பிக்கடையை மூடக்கூடாது—என்றது.

அந்த (ஆ)சாமி—அது அய்யர்கடையாச்சே;

அடேய்—கள்ளுக்கடையெல்லாம் தமிழ்ப் பள்ளிக்கூடமாக் கண்டா—

பணமில்லியே தாயே—

டேய்—இந்திக்குச் செலவழிக்கப் பணமிருக்காடா?—டேய்—இந்தியை எடுத்தா நிலைச்ச—இல்லா விட்ட கோயமுத்தூர்தா நினைப்பிருக்கட்டும்.—நேரமாயிட்டுது. மலையேறப்போறேம். சொன்னது நினைப்பிருக்கட்டும்—எங்கடா சூடம்?

ஜப்பான் கப்பல் வரலியே தாயே!

சாம்பிராணி சூடத்தையாவது கொளுத்துடா—சாமி மலையேறும்போது அடேய் என்னைச் சோதிக்கிறீங்களா? நாளைக்குக்காலையில் உங்களுக்கெல்லாம் கிச்சடித்தாண்டா-அப்படிதெரிஞ்சிக்கிங்க என்சக்தியை.

சாமி மலையேறிப்போச்சு.

T. S. மரகதம்.

## இளங்கோவன் திராவிடமணி.

துறையூர் டி. என். துரைசாமியவர்களின் வாழ்க்கைத்துணைவியார் ஆண்டாள் அவர்களுக்கு 14—9—48ல் இரு ஆண் குழந்தைகள் பிறந்துள்ளன. குழந்தைகளுக்கு இளங்கோவன், திராவிடமணி எனப்பெயரிடப்பட்டது. இதன் நினைவாகக் குடிஅரசுக்கு அனுப்பிய ரூ 1ம் வரப்பெற்றோம்.

வெளிவந்து விட்டது!

மக்கள் கவிஞர் (Peoples' Poet) அறிஞர் சி. என். எ. அவர்களின் முதல் ஆங்கில ரேடியோ சொற்பொழிவு.

கிடைக்குமிடம்:—

C. Ganesan,
New Justice Publishing House,
Washermenpet, Madras 21.

Best copy available.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கும் பயன் படாதவர்களாகச் செய்யும் என்பது என் திடமான அபிப்பிராயம் ஆகும். நம்தேசத்துத் தலைவர்கள் பலர் ஆங்கிலம் நமக்கு இன்றியமையாதது என்று கூறியுள்ளார்கள். ஆங்கிலமே இன்று உலக ஆதிக்கம் பெற்ற மொழியாயுள்ளது. வெளிநாட்டுத் தொடர்புக்கும் வியாபாரத்திற்கும் ஆங்கிலம் கற்பது அவசியமாகின்றது. இந்தி புதிய மொழி. போதிய சொற்களும் அதில் கிடையா. சிறந்த இலக்கியங்களும், நவீன விஞ்ஞான நூல்களும் இல்லாத ஒரு பேச்சு மொழி. இவ்வளவையும் இந்தியில் பெயர்ப்பது என்பது நம் காலத்தையும் கருத்தையும் பணத்தையும் வீண் விரயம் செய்வதன்றோ! விஞ்ஞானம், பொருளாதாரம் முதலிய சாத்திரங்களைப் பற்றிய முதனூல்கள் ஆங்கிலத்திலேயே உள்ளன. எனவே, ஆங்கிலத்தின் அவசியம் நன்கு விளங்குகிறது.

### இறந்த மொழிக்கு ஏற்றமா?

அரசாங்கத்தார் தமிழுக்கு 'அன்பு கூர்ந்து' அளிக்கவிருக்கும் ஆறு கால அளவை (Periods) களில், மூன்று கால அளவைகள், வடமொழியை மாணவன் கற்றுக்கொள்ளலாம் என்று ஒரு சாரார் ஆலோசனை கூறுகிறார்கள். அதாவது மூன்று கால அளவைகள் எல்லா மாணவர்களும் தமிழ் கட்டாயம் படிக்கவேண்டும்; இன்னொரு மூன்று கால அளவைகள், வேண்டுவோர் தமிழோ அல்லது வடமொழியோ படிக்கலாம் என்பதே அவர்கள் கூற்று! அன்னை கிண்ணிப் பிச்சை எடுக்கும்போது, குழந்தை கோதானம் கொடுத்த கதையாக அல்லவா இருக்கிறது இது! இறந்தமொழியை உயிர்ப்பிக்கத் தமிழில் பங்கு கொள்ளவேண்டுவதில்லை. இவை யனைத்தும் இன்று அறிஞர்களைக் குழப்பி நிற்கும் பிரச்சினைகளாகும். இவைகட்கெல்லாம் தக்க முடிவுகாணக் கூடியவர்கள்—காணவேண்டியவர்கள் நீங்களே.

### 'தகுதி' என்பது என்ன?

சென்ற சில ஆண்டுகளாகக் கல்வி நிலையங்களில் நம் மாணவர்களுக்கு இடம் கிடைப்பது மிகவும் கடினமாக இருக்கின்றது. மேலும் சென்ற 10, 15 ஆண்டுகளாகத்தான் நம் மாணவர்கள் கல்வியில் ஓரளவு முன்னேறி, அலுவலகங்களிலும்ஆங்காங்கு அமர்ந்து வருகின்றார்கள். இந்த நிலையில் பரீட்சையில் அதிக மார்க்குப் பெற்றவர்க்கே கல்வி நிலையங்களில், சேர்வதற்கு முதலிடம் தர வேண்டும், என்ற கூச்சலைச் சிலர் கிளப்பி வருகின்றனர். அதாவது தகுதிபார்த்தே சேர்க்க வேண்டுமென்கின்றனர். 'தகுதி' என்பது என்ன? பரீட்சையில் அதிகமார்க்குகள் வாங்கியோர் மட்டுந்தானா, தேறியவர்கள் எல்லாம் அதிக மார்க்குகள் வாங்கவில்லை என்ற ஒரே காரணத்துக்காகப்பிற எந்தத் தகுதி இருந்தாலும் விலக்கப்படவேண்டியவர்களா? அங்ஙனமானால் சமூகத்திலும் கல்வி நிலையிலும் மிக நீண்ட நாட்களாகப் பிற்படுத்தப்பட்டு இருந்து வருகின்ற நம் தமிழினம் முன்னுக்கு வருவது என்றைக்கு? நியாயப்படி பார்க்கப் போனால், பிற்படுத்தப் பெற்ற மக்களுக்கன்றோ சமூகத்தில் எல்லாத் துறைகளிலும் முன்னிடம் தர வேண்டும். எனவே, 'தகுதி' என்ற ஒன்றைக் காட்டி, நம்மைமீளா அடிமைகளாக்க நினைக்கும் எந்த, யாருடையசெயலுக்கும் நாம் ஏமாந்து போகாது மிகவும் விழிப்பா யிருக்க வேண்டும்............

("விதி விலக்கு ஆசிரியர்களின்கதி" "இடத்திற்கேற்ற ஊதியம்" "வித்வான் பரீட்சை" "குல்லாவுக்காகத் தலையா" என்கிற தலைப்புகளில் சிலவற்றைக் கூறி மேலும் கூறுவதாவது)

### புதிய கல்வித் திட்டம்.

நாட்டுக்குப் புதிய கல்வித்திட்டம் உருவாகி வரும் காலம் இது. இச்சமயத்தில் கல்வி சம்பந்தமாக—பாடத் திட்டம் பற்றி நீங்கள் கொண்டுள்ள கருத்தை, ஒன்றுகூடி ஆலோசித்து முடிவுசெய்து திட்டவட்டமாக அரசாங்கத்தாருக்குத் தெரிவித்து விட வேண்டும். கல்வி பற்றி அரசியலாருக்கு ஆலோசனை கூற உரிமையுடையவர்கள், ஆசிரியர்கள்—சிறப்பாகத் தமிழாசிரியர்கள். இப்போது பேசாதிருந்து விட்டுப் பின்னால் மற்றவர்களைக் குறை கூறுவதில் பயனில்லை. "செய்தக்க செய்யாமை யானும் கெடும்" என்பது வள்ளுவர் வாக்கன்றோ!

### ஒற்றுமை வேண்டும்.

நீங்கள் சமீப காலமாக இத்தகைய சங்கங்களும் மாநாடுகளும் கூட்டி ஒற்றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் வேலை செய்து வருவது கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்நிலையை மேலும் வளருங்கள். உங்களுக்குள், நீங்கள் பரஸ்பரம் ஒருவரை மற்றவர் மதித்து ஊக்கி உயர்த்துவதன் மூலம், எல்லோரும் உயர் நிலை அடையப் பாடுபடுங்கள்!

### சிற்பிகளுக்குச் சில வார்த்தை!

நாட்டின் எதிர்கால் தலைவர்களையும், மக்களையும் நல்ல முறையில் தயாரித்து அனுப்பும் சிறந்தபணி, சிந்தனைச் சிற்பிகளாகிய உங்கள் கையில் இருக்கிறது. நீங்கள் கடமையில் வழுவாது மாணவர்களுக்குத் தமிழுடன் நாட்டுப்பற்றும், உரிமை யுணர்வும், வீரம், காதல், ஈரம், உண்மை, ஒழுக்கம் முதலிய சிறந்த குணங்களும் உண்டாகுமாறு பணியாற்றுங்கள். இதில் வீரத்திற்கு உதாரணமாகத் திருமாவளவனையும், சேரன் செங்குட்டுவனை காதலுக்கும் கற்புக்கும் மாதவியையும் கண்ணகியையும் எடுத்துக் கூறுங்கள். உங்களில் பலர் இப்போது இதனைச் செய்து வருவதை அறிகின்றகாரணத்தால் மேலும் இதனை விளக்கிக் கூறாது மேலே செல்லுகின்றேன்.

### நல்ல எதிர்காலம்.

தமிழகத்துக்குச் சிறந்த எதிர் காலம் இருக்கிறது. உலகெலாம் தமிழ்பரவும் நிலை, மிக விரைவில் ஏற்படப்போகின்றது. தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர்களில் ஒருவரும் சிறந்த சிந்தனையாளருமான பேராசிரியர். மூ. வரதராசனார் தலைமையில் கூடியுள்ள நீங்கள், மாநாட்டை நல்ல முறையில் நடத்தி, சிறந்த உயர்ந்த முடிவுகளைக் கண்டு, காரியம் ஆற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குஉண்டு. தாழ்வு'மனப்பான்மையை அகற்றுங்கள்; தன்னம்பிக்கை கொண்டு முன்னேறுங்கள் என்று கூறி, இம்மாநாட்டை மிகுந்த மகிழ்ச்சியுடன்திறந்துவைக்கின்றேன். எல்லோருக்கும் மறு முறையும் வணக்கம்! தமிழ் வெல்க!

[5ம் பக்கத் தொடர்ச்சி]

விட்டாலும், இந்தமாதிரி பேசுவதற்கு வெட்கப்படாமலே தீரவேண்டும் என்பதை நாம் எங்கு வேண்டுமானாலும் கூறத் தயார். கம்பராமாயணத்தைக் கொளுத்த வேண்டும் என்று கூறுவது மடத்தனம் என்று பிரதமர்கூறுகின்றார்! தென்னிலங்கை வாழ்வோனை அரக்கன் என்றும் தென்னாட்டில் வாழ்வோரை வானரர் என்றும் கூறுகிற கம்பனைப் புகழ்கின்றார். மனிதப் பண்பில் கேடு கெட்ட இராமனின் தீ ஒழுக்கத்தை மறைக்கக் கம்பன் தெய்வீகக் கவசத்தைப்பூட்டினான். இவரோ அந்தஉலுத்தனின் ஒழுக்கத்தை மக்கள்கைக்கொள்ள வேண்டு மென்கிறார். வட நாட்டுக்குத் தென்னாட்டைக் காட்டிக் கொடுக்கும் திருப்பணியின் முதற் படியாக இந்தியை நுழைத்து, இங்குள்ள எண்ணற்ற ஏழைகள் உணவுக்கின்றி திண்டாடும் வேளையில் இலட்சக் கணக்கான வடநாட்டுத் தீயர்களை அகதிகள் என்ற பெயரால் இறக்குமதி செய்து, அவர்களின் போஷணையிலே கவனம் செலுத்தும் பிரதமரிடம்—தன்னையும் தன்னினத்தையும் ஆரியக் கூட்டம் சூத்திரர்கள் என்று சூதாக எழுதிவைத்து, இன்றும் சூத்திரன் என்றும் சூத்திரச்சி என்றும் இழித்துப் பேசி வருகிற இழிவு நிலை ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறையில்லாத பிரதமரிடம்—வேறு எதை

பேராஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அரக்கட்டளை

மதுவினுடைய போராற்றலைப்பற்றிக் கும்மாளத்தோடு பேசலாம்! திருடன் திருட்டுத் தொழிலின் சாதுரியத்தைத் திறமையாகக் கூறலாம்! அடிமையின் மோகம் அறாத நிலையில், அடிமையின் தனிச் சிறப்பை அடிமை அழகாகக்கூறலாம்! எந்த விதமான முதலும் இல்லாத தரகன், தரகுத் தொழிலின் மேன்மையைப்பற்றி இனிப்பாகப் பேசலாம்! ஏன் விபசாரிகூடத் தன் சுதந்தர வாழ்வின் சுயேச்சையைப்பற்றிச் சுவைபடப் பேசலாம்! அவைகளைப் போல வடநாட்டின் ஆட்சிக்கு ஒத்தூதும் கனம் பிரதமர், வடநாட்டு ஆரியரின் ஆட்சிக்கு வித்தூன்றிய கம்பனைப் போற்றுவதைக்கண்டு, கம்பனின் அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டும் என்று கூறுவதைக் கேட்டு யாரும் திகைப்போ,ஆச்சரியமோ கொள்ள மாட்டார்கள்.

உண்மையில் கனம் பிரதமர் அவர்களுக்கு நாம் இப்பொழுதும் கூறுகிறோம். இராமன்—இராவணன் இவ்விருவரைப்பற்றியும் சரித்திரக்காரர்கள் கூறுவதென்ன? அரக்கர், வானரர் என்போரைப் பற்றி அவர்கள் கூறுவதென்ன? ஏன் பிரதம மந்திரி ஜவகர்லால் கூறுவதென்ன? கம்பன் கையாண்ட சொல் எளிய சொல்லாயிருக்கலாம். நல்ல கற்பனை வளம் செறிந்ததாகவும் இருக்கலாம். இடத்திற்கேற்ற உணர்ச்சியூட்டும் சந்தங்களையுடைய பாக்களாகவும் இருக்கலாம். ஆனால் கவர்ச்சியானகதை என்றோ, கருத்தின் கருவூலம் என்றோ அதைக் கொள்ள முடியுமோ? கம்ப இராமாயணம் மக்களிடம் கதை முறையில் செல்வாக்குப் பெற்றிருக்கிறதா? இலக்கிய முறையில் செல்வாக்குப் பெற்றிருக்கிறதா? அல்லது தெய்வக்குமரனின் திருச்சரிதமாகச் செல்வாக்குப் பெற்றிருக்கிறதா? கம்பன் கண்டதாகச் சொல்லப்படும் இராமன், வால்மீகி கண்ட இராமனிலிருந்து திருத்தப்பட்ட இராமனே தவிர, கம்பனின் தனிக் கண்டுபிடிப்பு என்று எப்படிச் சொல்ல முடியும்? இராமனின் பிறப்பிலிருந்து அவன் இறப்புவரை இராமனின் அயோக்கியத்தனத்தை—ஆபாச விளக்கத்தை முதனூல்காரரான வான்மீகி கூறியிருக்க, வழிநூல்காரரான கம்பர் அயோக்கியத்தனத்தையும் அபா இடத்திலெல்லாம் மறைத்துத் தெய்வீகத்தைப் புகுத்தியிருப்பதினாலேயே, கம்பன் கண்ட இராமன் வேறானவன் என்று எப்படிச் சொல்ல முடியும்? வான்மீகிகண்ட இராமனியல்பை மாற்றித் தெய்வீகத்தைப்புகுத்திய கம்பர், வான்மீகி கண்ட அரக்கரைப்பற்றியும், குரங்குகளைப்பற்றியும் யாதுசெய்தார்? வான்மீகி கூறியதைக் காட்டிலும் அரக்கர், குரங்கு ஆகியோரைப்பற்றி அதிகமாகப் புளுகி இருக்கிறாரே தவிர, கம்பரின் இராமாயணம் வேறு என்றுசொல்லத் தகுந்த மாதிரியில் அவர்களின் இயல்பையும் மாற்றியிருக்கின்றார் என்றோ, கட்டுக் கதை என்று உணர்ச்சி கொள்ளும்படி ஆக்கியிருக்கிறார் என்றோ கூறிவிடமுடியுமா? கம்பரால் கூறப்படும், கதைக்குப் புறம்பான நீதிகளைப்பற்றித் திராவிடக்கழகத்தார் எவரும் வெறுப்பதில்லை. கம்பரின் கவித்திறமையைப் பழிப்பவரும் கழகத்தாரில் எவருமில்லை. தமிழ் நீதிகளும், கவித்திறமையும் நிரம்பியிருந்தாலும், கம்பனின் கடைகெட்ட போக்கால்-நடத்தையால்—இந்நாட்டு மக்கள் இழிந்தவர்கள் என்று கூறுவதற்கும், இந்நாட்டுப் பொது மக்களின் முன்னேற்றத்திற்கு (இலக்கிய ரஸிக சிகாமணிகளுக்கல்ல) பெரும் முட்டுக்கட்டையாகவும், பார்ப்பனர்களின் நல்வாழ்வுக்குப் பாதுகாப்பாகவும் இருக்கிற காரணங்களினாலேயே நாம் அதைக்கொளுத்த வேண்டுமென்கிறோம்.

திராவிடக் கழகத்தார் கொளுத்த வேண்டும்—மக்கள் அதை வெறுக்கவேண்டும் என்பதற்கு என்னென்ன காரணம்கூறிவருகிறார்களோ, அக்காரணங்களைத் தவறென்று ஆதாரங்காட்டி மறுக்க, அறிவோ ஆண்மையோ இருந்தால் முன்வரவேண்டும். அதை விட்டுவிட்டுப், பொதுவாகக் கொளுத்த வேண்டுமென்பது மடத்தனமென்பதோ, கம்பன் கண்ட இராமன் தனி என்று எந்த விதமான ஆதாரமுமில்லாமல் பேசுவதோ, ஆரியன்—திராவிடன் என்கிற பிரச்னை கம்ப இராமாயணத்தில் இல்லை என்று பூசிமெழுகுவதோ அறிவுக்கோ, ஆராய்ச்சிக்கோ பொருத்தமில்லை என்பதை பிரதமர் அறியவேண்டும். அவைகளைப் பற்றி எமக்கு அக்கரையில்லை யென்றால், அறிவுடையோர்கள் டத் தேவையில்லையென்றே நாம் கூறுவோம்.

மேலும், சீதையைப் போன்ற கற்புவேண்டும் என்கிற அறிவுரையைக் கேட்டு, செந்தமிழ் நாட்டுப் பெண்கள் கொதித்தெழுந்து, என்றைக்காவது ஒரு நாள் விளக்கமான ஆயுதங்களோடு காட்சியளித்து வீரபத்தினிகளாக விளங்குவார்கள் என்கிற நம்பிக்கையும் நமக்கு உண்டு.

கல்கிக் கம்பெனியார்.

இந்தவிழாவுக்குச் சூத்திரதாரியாக இருந்து, இந்த விழாவுக்கு வந்த பெரிய பெரிய கனங்களை இருகை கூப்பி வரவேற்ற தோழர் கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி அய்யர். அதற்குக் கூடமாட இருந்து ஒத்துழைத்தவர் சதாசிவ அய்யர். வந்திருந்த கனங்களின் தலையாட, உள்ளம்உற்சாகத்தால் ஆட, ரம்மியமான நடனமாடியவர்கள் அவ்விருவரின் பெண்கள். அதற்குப் பின் பாட்டுபாடியவர் சுப்புலட்சுமி யம்மையார். எல்லோரையும் வருக! வருக! என்று அழைத்துவிட்டு, வந்த பொதுமக்களை போலீசைக்கொண்டு விரட்டி அடிக்கச் செய்த புண்ணியவான்களும் இவர்கள்தான்.

"தோள் கண்டார் தோளே கண்டார்" இது இராமனின் அங்கவருணனையாகக் கம்பர் இராமாயணத்திலே கூறுவது. கதாகாலட்சேபக்காரர்கள் தம் அநுபவத்தில் கண்டு மகிழ்வதற்கும் இடமாக இருந்தது. அந்தப்பயிற்சி ஒழிந்துவிடாமல் இருக்க வேண்டுமென்பதற்குத் தானோ என்னவோ, இந்தக் கம்பர் விழாவிலும் நாட்டியத்திற்குஇடமளித்திருக்கிறார்கள் என்று மக்கள் பேசிக்கொண்டால் அது அறவே உண்மையில்லை என்று சொல்லிவிட முடியாது.

தமிழன் இழி மகனாகவே இருக்க வேண்டும், இலக்கியத்தின் பேரால் கம்பன் அதற்குப் பெருந்துணையாய் இருப்பான் என்று முடிவுகட்டி, அதற்கான சிலகவீன வீபிஷணர்களையும் கூட்டி, ஆச்சாரியார் மண்டபத்தில்எப்படியோ பார்ப்பனர்கள் 3 நாள் கூத்தடித்துவிட்டார்கள். கூத்தடிக்கட்டும்!, கும்மாளம் போடட்டும்! அடுத்த கட்டத்துக்கும் ஆபத்தமாய் இருக்கட்டும்!

[4ம் பக்கத் தொடர்ச்சி]

அந்த உருவம். பாட்டரியை அடித்துப் பார்த்தேன், திடுக்கிட்டு விட்டேன். அவன் யாருமில்லை! சோமு என்று பெருமூச்சுடன் கூறியது என்வாய். சேகர் என்று பதற்றத்துடன் கூறினான் அவன். சோமுதான், என் நண்பன் சோமு தர்ன், என் உயிர்க்குயிர் நண்பன் சோமுதான், என் தாய் தந்தையரைவிட அதிக அன்பாக நேசித்த அதே சோமுதான் அவன்.

வேறு ஒன்றும்சொல்ல என்நாவு எழவில்லை. அப்படியே நான் திரும்பிவிட்டேன் ஒன்றும் சொல்லாமல்.

அத்தான் அந்தத் துரோகியை ஒன்றும் செய்யவில்லையா? அந்த கயவன்தானா இவன்?

யார் துரோகி? சிந்தித்துப்பார்த்தால் அதற்கு இடமேயில்லை விமலா!

அப்புறம் என்ன அத்தான் செய்தீர்கள்? முடிவு என்ன?

அதிகமாகக்கூற விரும்பவில்லை சுருக்கமாகக்கூறிவிடுகிறேன். மூன்றாம் நாள் பங்கஜம்—சோமு சீர்திருத்தக் கலப்புமணம் கிராமமுனிசீப் முத்துசாமிநாயுடு தலைமையில் நடைபெற்றது. அதில்சொற்பொழிவாற்றியதும் நானேதான். என் குழந்தைசரோஜா பத்துமாதசிறுமி. அதையும் அவள் வசமே ஒப்படைத்து விட்டேன். மறு நாளே ஒருமாதத்துக்கு லீவு எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டேன். என் தாய் தந்தையர்கள்சீறிப்பாய்ந்தனர். செல்லப்பிள்ளையாக வளர்ந்து வந்த நான் அன்றுதான் என் தகப்பனாரின் கொடூரக் கோபத்திற்கு ஆளாகி யனார் என்று கன்னத்தில் ஒரு அடியும் வாங்கி விட்டேன். என் சகோதர வாஞ்சை என்னை காக்கத் தவறவில்லை.

வருடம் ஒன்று ஓடி மறைந்தன! நம் காதல் சீர் திருத்தத் திருமணம். மறு வருடம் என் செல்வப்புதல்வன் "மணவாளன்" என்று தன் குழந்தையைத் தூக்கி முத்தமிட்டான். இதுதான் உண்மையாக நடைபெற்றசெய்தி விமலா!

அத்தான்!

விமலா!!

பக்கத்திலே நெருங்கினர் இருவரும்.

"நீங்கள்சீர்திருத்த செம்மல்! பகுத்தறிவின்பாசறை! தியாகத்தின் சிகரம்! உண்மைத் தியாகி! லட்சியவாதி!

விமலா அதற்கு நான் அருகதையற்றவன். அதோ பார்! என்று தன் விரலைச் சுட்டிக்காட்டினான். சுவரிலே மாட்டியிருந்த பெரியாரின் படம் புன் முறுவலுடன் காட்சி அளித்துக்கொண்டிருந்தது.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சிலை வணக்கத்தால் இன்னலுழந்தோர் தொகை எண்ணிலடங்கா. கண்ணப்பன் கண்ணையிடந்ததும், கழற்சிங்கன், சிலைமீதிருந்த மலரை அறியாமையால் முகர்ந்ததற்காகச் சிலைவணக்கஞ் செய்தறியாச் செம்மை மதத்தினளான, தன் புதுமணநாயகியின் மூக்கையரிந்ததும் சிலைமீதுற்ற சிறுமதியினாலன்றோ?

எனவே இத்தகையோரின் சிறுமதிக்கிரங்கி, அவர் தமக்கு அறிவு தெருட்டுவான் வேண்டி, உடம்பே ஈசன் கோவில் என்றும், உடம்பினுள் நோக்கினாலே ஈசனைக் காணமுடியுமேயன்றி ஏனைய வழிகளால் இயலாதென்றும், சிலை வணக்கம் சிறுமையையே விளைவிக்குமென்றும் இடித்திடித்துக் கட்டுரை பல கூறிச் சென்றனர் அனுபூதி ஞானிகளாய நம் முன்னோர். அவற்றுட் சில, ஈண்டு எடுத்துக்காட்டத் துணிகின்றேன்.

1. "எத்தனைதான் கல்லுகளைப்
பூசித்தாலும்
ஈனர்களே உங்களுக்கு
மோட்சமுண்டோ"—சித்தர்.

2. "உடம்பினைப் பெற்ற
பயனாவதெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக்
காண"—ஔவைக்குறள்.

3. காயக்ஷேத்ரம்போரும், காயத்ரீ
தைவ மவிடெயுண்டெல்லொ
ஆயது விட்டலயுன்னோர்க்கு,
ஆயாசம் தன்னெ ஸௌக்ய
முண்டாகா"—சித்தானுபூதி.

4. தேஹோ தேவாலயம்
ப்ரோக்தம்—சிவஞானதீபிகை.

கருத்து:— உடலே ஈசன் கோவில் ஆகும்.

5. ஈஸ்வர: ஸர்வ பூதானாம்
ஹ்ருதே சேர்ஜ்ஜுன
திஷ்டதி—பகவத்கீதை.

கருத்து:— இறைவன் சகலவுயிர்களின் இதயத்துள்ளும் இலங்குகின்றான்.

6. சமபோதாதிபி: புஷ்பைர்த்
தேவ ஆத்மாய தர்ச்யதே
தத்துதேவார்ச்சனம் வித்தி னாகா
ரார்ச்சனமர்ச்சனம்-வாவிஷ்டம்.

கருத்து:— மனச்சாந்தி, அறிவு முதலாய மலர்களால் உளக்கோயினுள் எழுந்தருளியுள்ள கடவுளை வழிபடுதலே உண்மை வழிபாடாகும். அதை விட்டு, கல் முதலாய சிலைவணக்கங்கள் செய்தல் உண்மை வழிபாடாகா.

7. கபிரெ காஸாரெ விசதி
விஜனெ கோர விபினெ
விசாலெ சைலெச ப்ரமதி
குஸுமார்த்தம் ஜடமதி:
ஸமர்ப்பயைகஞ்சேத: ஸரஸிஜ மும
நாத பவதெ
ஸுகேனா வஸ்தாதும் ஜன இஹ
நஜானாதி கிம் அஹோ-சிவானந்த
லஹரி

கருத்து:— கடவுளே! மனமாகிய தாமரை மலரை உனக்கு அர்ப்பணஞ் செய்து சுகித்திருக்கத் தெரியாமல், மூடர்கள் ஆழமான மடுவிலும், மக்கள் நடமாட்டமில்லாப் பயங்கரமான வனங்களிலும், நெடிய மலைகளிலும் மலருக்காக அலைகின்றார்கள். இஃதென்ன அற்புதம்!

மேற்கூறியபடி அனுபவ ஞானிகளால் சிலை வணக்கத்தைக் கண்டித்துத் தெள்ளத் தெளியக் கூறப்பட்டிருப்பினும், மக்களிற் பெரும்பாலோர் அவர் தம் உரைகளை நன்கு மதிப்பதில்லை. காரணம், அவர்கள் மன்னர், தனவந்தர், புலவர்களைப் போலச் செல்வாக்குடையவர்களாயில்லாமையாலேயாம்.

இக்குறையை நிவர்த்திப்பான் வேண்டிப்போலும், இஞ்ஞான்று, திராவிட நாடு செய்த தவப்பயனாய் பகுத்தறிவும் போதிய செல்வாக்கும் ஒருங்கே யமையப்பெற்று, "இருவேறுலகத்தியற்கை திருவேறு தெள்ளியராதலும் வேறு" என்ற பொய்யாமொழியைப் பொய்மொழியாக்கித் திகழ்பவரும், இன்னா செய்தார்க்கும் நன்னயஞ் செய்யும் இனிய பண்பு வாய்ந்தவரும், சீர்திருத்தச் செம்மலும் ஆன பெரியார் தோன்றிஒப்புயர்வற்ற-என்றுங்கண்டிராத— பகுத்தறிவியக்கமொன்று கண்டு, 'பாருக்குழைப்பதே மேலான யோகம்' என்றுகொண்டு கால் நூற்றாண்டாக அல்லும்பகலும் அலுப்பு சலிப்பின்றி அருந்தொண்டாற்றி, தைப்புண்ட ஆணிதனக்கெதிராணி கடாவியதைச் சாய்க்குமாபோல், ஆரிய மத அனாச்சார கன்மங்களைக் கையாண்டு,அஞ்ஞான துன்பத்துள் அழுத்தப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களைத் தம்சொற்பொழிவுகளின் மூலமும் கட்டுரைகள், புத்தகங்கள் வாயிலாகவும் திருத்தி ஞானக்கண்ணைத் திறப்புவித்துக்கொண்டு வருகின்றார். இவர் தம் அரிய தொண்டு இன்னும் பல்லாண்டு பயனுற்று மிளிர்வதுடன், பகுத்தறிவியக்கமாகிய திராவிடர் கழகம் எஞ்ஞான்றும் நின்று நிலைபெற்று, நம்நாட்டிற்கேயன்றி ஏனைய நாடுகட்கும் வழிகாட்டியாயிலங்குவதாக.

நிற்ப, ஒரு சாரார் 'சிலை வணக்கமானது மோட்சமடைவதற்கு முதற்படியாய் விளங்குகிறது; அதை விடுவது தகாது; தெரியாமலா பெரியோர்கள் இதை ஏற்படுத்தியிருக்கிறார்கள்? இதைக் குறை கூறுவோர் [illegible]

யர்களேயாவர்; பாலபாடங்கற்றுத்தா னேபண்டிதனாகவேண்டும்! எடுத்தவுட னேயே பண்டிதனாய் விடுவானோ?'' என்று விதண்டை பேசுகிறார்கள் .அங் ஙனமாயின் சிலை வணக்கத்தைக் கண் டித்த சித்தர், அவ்வை, கிருஷ்ணர், வஸிஷ்டர்,சங்கரர்,பிர்மானந்தஸ்வாமி, முதலியோர் ஒன்றுமறியா அறிவீனர் களா? ஒவ்வொருவரும் தாம் தாம்கண்ட அனுபவ ஞானங்களையன்றோ மக்கட் குத் தெளிவுறுத்திப் போயிருக்கிறார் கள்! எந்தப்பண்டிதனாவது பாலபா டங்கற்கு மொருவனை யிகழ்வானோ? தோணியின் துணைகொண்டு ஆற் றைக் கடந்து சென்ற ஒருவன், அத் தோணியையோ அல்லது அதன் துணையைக் கொண்டு கடக்கவிருப் பான் மற்றொருவனையோ இகழ்தலைக் கண்டுள்ளோமோ? Lift (ஏற்றம்) இன் மூலம் மேல்மாடி யடைந்தவன் அவ் லிப்டையோ அதன் வாயிலாய்ச் செல்லவிருப்பானையோ இகழ்தலைப்பார்த்துள்ளோமோ இது வரையில்? இல்லையல்லவா! எனவே மேற்கூறியவிதண்டாவாதம்செய்வோர் கூற்று அறியாமையால்-அனுபவமின் மையால் எழுந்தகூற்றென்றுகோடலே பொருந்துமாறறிக.

அன்றியும், இவர்தம் கூற்றுப்படியே சென்றாலும் தவறுறுவதைக் காண்கி றோம். எங்ஙனமெனில், பாலபாடங் கற்றுப் பண்டிதனான ஒருவன்மீண்டும் அப்பால பாடத்தையே படித்துக் கொண்டிருப்பதில்லை. அதுபோல் சிலைவணக்கத்தின் மூலம் பேரின்ப நிலையாய முத்தியெய்தியவர் மீண்டும் அச்சிலையையே வணங்கிக் கொண்டி ருக்க வேண்டுவதில்லையன்றோ! ஆயின் நாம் அனுபவத்தில் காண்பது அவ்வாறன்று. இளமையில்சிலைவணக் கம் செய்து பழகிய ஒருவன் தன் வாணாளளவும் அவ்வணக்கத்தை விடு வதில்லை. ஒரு பழக்கம்-நல்லதோ- கெட்டதோ-இளமைக்கால முதல் கையாண்டு வழக்கத்தில் கொண்டு வந்து இடையில் அதை விடுவதென் றால் மிக மிக அரிதென்பதை இவ்வுல கில் நடைமுறையில் கண்கூடாகக் கண்டு வருகிறோம். இதுபற்றிஉளநூ லாராய்ச்சியில் இறங்க வேண்டுவ தில்லை. எடுத்துக்காட்டாக, தியாக ராஜஸ்வாமிகள் யாகம், சிலைவணக் கம் முதலிய கன்மங்களால் துன்பமே யன்றி இன்பமில்லை யென்பதைத் தம் அனுபவத்தால் நன்குணர்ந்திருக்கின் றார் என்பதை 'ஸாந்தமுலேக' என்ற பாட்டில் நன்கு தெளிவுறுத்தி யிருந்தும், தாம் தம்மிளமைக்கால முதல் வழிபட்டுவரும் சிலையானது (ராம விக்ரகம்) களவு போன போது நீள் துயருற்றது பழக்கத்தின் காரண மல்லவா!

எனவே எல்லாப்படியாலும் எண்ணி னாலும், சிலை வணக்கமானது அஞ் ஞானத்தையும், அடிமைத்தனத்தை யும், மீளாத்துன்பத்தையும், வறுமை யையும் சோம்பலையும் வளர்ப்பதென் பதும், முத்தியாகிய பேரின்ப நிலை யெய்துதற்குப் பெரியதொரு தடை யாயுள்ள தென்பதும், பகுத்தறிவை மாய்க்கும் மதுவையுடைய படையென் பதும், எட்டுணையும் அய்யப்பாட் டிற்கிடனில்லாத ஆரிய வன்கண்ணர் களால் தம் வாழ்வின் நலனுக்காகச் செய்யப்பட்ட சூழ்ச்சி யென்பதும் வெள்ளிடைமலை போல் விளங்க லால், இதையறவே யொழித்து, பகுத்தறிவின் மாட்சியால் உளத்துள் இலங்கும் இறையொளியைக் கண்டு துக்க நிவர்த்தியும் ஆனந்தப்ராப்தியும் அடைந்து மக்கட் பிறப்பின் மாண்புறு பயனை யடைவோமாக. உளக் கட வுளை வணங்குதலில் பெரியாரவர்கட் கும் கருத்து வேறுபாடில்லை யென் பதை வாசகர்க்கு ஈண்டு நினைவூட்டு கிறேன்.

''நுண்ணுணர்வு இன்மை வறுமை
அஃதுடைமைப்
பண்ணப் பணைத்தபெருஞ்
செல்வம்''—''நாலடியார்''

''சு முருகேசன்''

வெளிவருகிறது!

# தில்லையில் பெரியார்.

சிதம்பரம் பொதுக்கூட்டத்தில் தலைவர் பெரியார். ஈ. வே. ரா. அவர்கள் ஆற்றிய பூரா சொற்பொழிவு விபரங் களும். 64 பக்கங்கள்.

அழகிய மேலட்டை: விலை அணா 8.
ஏஜன்சி கமிஷன் 20%.
பிரதிகளுக்குப் பாதி முன்பணத்துடன் ஆர்டர் செய்க!
(ஈரோடு மாநாட்டில் விற்பனைக்குத் தயார்)

விலாசம்:—
"திராவிடமணி"
தேப்பக்குளம், P. O., திருச்சி.

அறிஞர் அண்ணாதுரை.

| | | | |
|---|---|---|---|
| ரோமாபுரி ராணிகள் | 2 | 4 | 0 |
| கம்பரசம் | 1 | 8 | 0 |
| குமரிக்கோட்டம் | 1 | 0 | 0 |
| விடுதலைப்போர் | 1 | 0 | 0 |
| கற்பனைச்சித்திரம் | 1 | 0 | 0 |
| சிறுகதைகள் | 1 | 0 | 0 |
| ஆரியமாயை | 1 | 0 | 0 |
| உலக பெரியார் காந்தி | 1 | 0 | 0 |
| ரேடியோவில் அண்ணா | 0 | 12 | 0 |
| வர்ணாஸ்ரமம் | 0 | 12 | 0 |
| ஏ தாழ்ந்த தமிழகமே | 0 | 8 | 0 |
| திராவிடர் நிலை | 0 | 6 | 0 |
| நாடும் ஏடும் | 0 | 6 | 0 |
| மே தினமும் திராவிடர் கழகமும் | 0 | 5 | 0 |
| நல்ல தீர்ப்பு | 0 | 4 | 0 |
| மகாத்மா காந்தி | 0 | 3 | 0 |

கிடைக்குமிடம்:
நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரி வீதி, ஈரோடு.

வேண்டாத செயல் புரியும் ஆளவந்தாரின் விபரீதப் போக்குக்குக் கல்லறை கட்ட எழுந்த புரட்சி நூல்!
சாமி பழனியப்பன் இயற்றிய

# சிரிக்கும் வையம்!

விலை 4 அணா. தபாலில் 5 அணா.
சுடரொளி நிலையம்,
போ. புதுப்பட்டி : : புதுக்கோட்டை.

விற்பனையாளர்கட்கு 25% கழிவு தரப்படும்.
ஈரோட்டு மாநாட்டிலும் கிடைக்கும்.

ரோஜா முத்தையா

# ★ நல்ல புத்தி! ★

ஆலங்குடி எப்படி பாக்கு வெட்டிக்குப் பெயர் போனதோ, பேரளம் எப்படி வடைக்குப் பெயர் போனதோ, தஞ்சாவூர் எப்படி உருட்டுப் பொம்மைக்குப் பெயர் போனதோ அப்படியே ஓமந்தூரார் ஆட்சியும் அடக்கு முறைக்குப் பெயர் போய் விட்டது.

"இந்தி" இதனால் தமிழ் கெடாதென நினைக்கின்றேன். இதற்கென மக்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்ட நினைப்பின், அவர் தம் மறியலிலே அமைதியிருப்பின் அனுமதிக்கின்றேன்" என்ற கருத்துப்படபேசிய பிரதமர், இன்றைக்கு மறியல் தொண்டர்களின் வாழ்விலே குறுக்கிடும் பேதைமை பெருமைப்படக்கூடியதல்ல.

அவர் ஆட்சியிலே—அவர்கூட்டத்திலே அவர் போதனையிலே உள்ள திருக்குழுவான மந்திரிமார்களில்கூட ஒருசிலர் இந்த அடக்கு முறையைப்பற்றி மகிழ்வதற்கில்லை.

தோழர் வேதரத்தினம் ஒட்டை சங்கொலி கிளப்ப, மந்திரி பக்தவத்ஸலனார் 'புஸ்'ஸென மடியுமியக்கமெனக் கூற சென்னை நீதிபதி யொருவர் 'உங்கள் கொடி நிறத்தைப்போலவே செய்கையுமிருக்கின்றது' என தீர்ப்பளிக்க, இந்த நெருக்கடியிலே சமாளித்து வெற்றிபெறும் வேலையை தலைவர்களுக்கு அறிந்தோ, அறியாமலோ இட வம்பு நீளுகின்றது.

தேசியத் தோழர்களென்னும் காங்கரசார், வள்ளல் காந்தியை வட நாட்டான் ஒருவன் கொன்ற குற்றத்திற்கு தென்னாட்டு ஆரியர் தொடர்பற்றவர் என்பதை நாம் மறுப்பதற்கில்லை. ஆனால் ஹைதராபாத்திலே நடக்கும் ரசாக்கியர்களின் அட்டூழியங்களுக்கு மட்டும் எப்படித் தென்னாட்டு முஸ்லிம் குற்றவாளியாக முடியும்?

ஹைதராபாத்திலே ராணுவ நடவடிக்கை! அதன் பிரதிபலிப்பு தென்னாட்டிலே உள்ள ஒவ்வொரு முஸ்லிம் வட்டாரத்திற்கும் போலீஸ் பாதுகாப்பு!

ஹைதராபாத் நிகழ்வு பயத்தையும், அர்த்தமற்ற பீதியையும் அரசினருக்கு உண்டுபண்ணினால், அதற்கு சட்டசபை அங்கத்தினர் தோழர் சலாம் குற்றவாளி எனக் கைது செய்யப்படுகிறார்.

முறையற்றதன்மையிலே ஓமந்தூரார் ஆட்சி ஓட்ட, ஒரு சில ஆரியத் தாள்களும் அதைப் பாராட்டி எழுதுவதென்றால் எப்படி நம்மால் ஒதுங்கி நிற்க முடியும்?

எந்த மக்கள் தங்கள் நன்மைக்கென மந்திரிசபையமைத்து ஏமாந்தனரோ, அதே மக்கட் குழுவால், அமைத்த மந்திரிசபையை சுக்கு நூறாகத் தகர்த்தெரியவும் முடியும் என்பதை இன்னுமா ஓமந்தூரார் அறியவில்லை?

ஆரிய சூழ்ச்சி ஓமந்தூராரையும் அவர் சர்க்காரையும் பயன்படுத்திக்கொள்வது, ரசாக்கியர் கூட்டம் தங்கள் நன்மைக்கு நைஜாமைப் பயன்படுத்திக்கொள்ள, இறுதிக் கட்டத்திலே 'நைஜாம்' என் குற்றம் எதுவுமில்லை, என்னை மன்னிக்க வேண்டுமென்ற அபயக்குரல் வானொலியிலே வளர்த்த நிலையையே ஒத்து நிற்கின்றது.

ஓமந்தூரார் உணர்வதற்குஇதைவிட நல்ல சமயம் வேறொன்றும் வாய்க்க முடியாது.

அடக்குமுறை எந்த நாட்டிலும் சிரஞ்சீவித் தன்மையயடைந்ததாகக் கூற முடியாது.

இந்தத் திமிர் படைத்த ஏகாதிபத்திய நச்சரவத்தன்மை தலைக்கேறி மாளுவதைவிட்டொழித்து, ஆஸ்தீக முறைப்படி விரதங்களைக் கூடத்தவறாது பின்பற்றும் ஓமந்தூரார் அருள் கொண்டாவது மக்கள் குலத்திற்குத் தொண்டாற்றவரவேண்டுமென அழைக்கின்றோம். இதை ஏற்றுத்திருந்தினால் ஓர் நல்ல இனிமைபயக்கும் தொடர்பு மக்கள் குழுவிற்கும் ஓமந்தூரார் ஆட்சிக்கும் ஏற்படும் வழிகள் நிரம்ப உண்டு. தவறி, இன்னும் தன் தூண்டப்படும் 'ஜார்'கால ஆட்சியை நீடிக்க விரும்பின் அது போர்க்களத்திலே புறமுதுகிட்டோடும் நிலைக்கே கொண்டு நிறுத்தும்!

எந்த நாட்டின் பகுதிகளிலாவது மொழிக்கென ஓர் புரட்சி—எதிர்ப்பு நடந்ததாக ஓமந்தூரார் கண்ட எந்தச் சரித்திர ஏடாவது சொல்லியதுண்டா? அன்றி அவர் துணை தாங்கிகள்தான் தெரிந்திருக்கும் பிரச்சனையா?

நாட்டில் உணவிற்குப் பஞ்சம், உடைக்குப் பஞ்சம், பொருளாதாரத்திலே நெருக்கடி, இப்படியே இன்னும் பல மாறி மாறி தலை தூக்கையில் அறுசுவையுண்டி கொண்டு ஆளவந்தார் ஆர்ப்பரிப்பு தென்றால், அடங்குமா நாட்டில் புரட்சி? நிலைக்குமா இங்கு அமைதி?

தன்மானப்பூகம்பத்திலேதழைக் கூத்தாடிகளின் வேலை இருக்க முடியாது, எனவே எச்சரிக்கின்றோம் 'ஓமந்தூராரே பிழைத்துக் கொள்ளுங்கள்' என்று.

பதவிப்பித்து,பக்கத்தாளரசிப்பு, பணவேட்டை, மந்தபுத்தி இவைகள் தன் வலிய இரும்புக்கரங்களை இறுகப்பிணைக்கும்போது இஷ்டமிருக்காதுதான் மக்களுக்குத் தொண்டாற்ற!

நாடு சுற்றக்கிளம்பிய எத்தனை மந்திரிகளுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது என்பதை எடுத்துக் காட்ட இன்றைய சர்க்காருக்கு தூய இருதயம் உண்டா?

கருப்புக்கொடி காணாது எத்தனை பேர்கள் அமைதியான—வெற்றிகர சுற்றுப்பிரயாணம் செய்துள்ளனர்?

எனவே,அழைக்கின்றோம் ஓமந்தூராரை 'திட்டமிருக்கின்றது திருந்துங்கள் என்று?

சட்டசபையிலே எடுக்கும் நடவடிக்கை ஒன்றாவது எதிர்ப்பில்லாமல்—வெட்டுப் பிரேரணையில்லாது நிறைவேறத்தான் சாத்தியமுண்டா?

எனவே, கூவுகின்றோம் மக்கள் பழிக்குப்பழி வாங்க நினைக்கு முன் 'நாட்டை நாடாக்குங்கள்' என்று.

ஒரு பெரியார், அல்லது அவரது இயக்கம் கூறுவது வேண்டுமானால் உங்கள் வரை, தென்னாட்டு சர்தாரின் விமர்சனத்தால் வெறும் கூச்சலாக இருக்கலாம். தென்னாட்டு மக்களின் ஓலப் புரட்சிக் குரலுமா இன்னும் உங்கள் செவிகளிலே எட்டவில்லை? எனவே வரவேற்கின்றேம்' திராவிடா! திராவிடனாகு' என்று.

கல்வியமைச்சு கரைதேட, கலாலமைச்சு குறைகுவிக்க, கற்றார் கல்லாத பாட்டாளர் இவர்களெல்லாம் கருத்திலே மாறுபட, மேலிடம் கட்டளை காட்ட, 'என்னால் என்ன செய்ய முடியும்' என முதலமைச்சு முறையிடும் தோரணை உதிக்க, நிர்வாகப்பிழை நிம்மதியற்ற வாழ்விலே மக்களை இழுத்துச்செல்கின்றது. எனவே

தான் இந்தத்தொல்லை நீக்கத் துரி
தப்பாதைக்கு அழைக்கின்றோம்
ஓமந்தூராரை! கூறுகின்றோம்
நல்ல புத்தி! ஆனால் கேட்பாரா?

அமீத்.

★

அப்படியிருக்கும்போது ஏன் சில வடநாட்டவருக்கும் இங்குள்ள சில ஒத்தைப்புத்தி பார்ப்பனருக்கும் பயந்து இந்தியை இந்நாட்டில் நுழையவிடுகிறாய்? நீ தப்பு செய்கிறாய்! தைரியமாக வடநாட்டார் உத்தரவை நிராகரித்துப்பார். "திராவிட நாட்டு மக்கள் ஹிந்தியை வெறுக்கிறார்கள்; ஆகவே இந்நாட்டில் ஹிந்தியைக் கட்டாயமாக்க முடியாது" என்று கூறிவிடு. அதற்கு எங்களைச் சாட்சியாகக் காட்டு. நீயாக ஏன் பழியை ஏற்றுக் கொள்கிறாய்? நீ நிராகரித்துவிட்டால் அவர்கள் தாமாக உத்திரவிட்டு தாமாகவே எங்களுடைய எதிர்ப்பை ஏற்பார்களா இல்லையா? வீண்குழப்பத்தை ஏன் இந்த நாட்டில் உண்டாக்குகிறாய்? அவர்கள் ஆட்டுவித்தபடி ஏன் நீ ஆடிக்கொண்டிருக்கிறாய்? திராவிட மக்களுக்கு உன்னிடமுள்ள நம்பிக்கையை ஏன் இதன் மூலம் கெடுத்துக்கொள்கிறாய்? இந்நாட்டுப் பெரும்பான்மை திராவிட மக்கள் அத்தனை பேருடைய ஆசரவும் உனக்கிருக்கும்போது ஏன் அச்சப்படுகிறாய்? தைரியமாக வடநாட்டார் உத்தரவை நிராகரித்துவிடு. இன்றேல் எங்கள் எதிர்ப்பையேனும் ஏற்றுக்கொள்.

கவிஞர்.

★


# குரு தைலம்

மிகச் சிறந்தது

தலைவலி ஜீரம் ஜன்னி முதலிய சகலவித வாய்வு வலிகளுக்கும் நிகரற்றது
210-வியாதிகளுக்கு அரசன்

248

GURUCURES

22



Alvar

டாக்டர் ஏ மதுரம் சன்ஸ்
குரு மருந்து சாலை............ திருச்சிராப்பள்ளி


## குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

★

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| புது ரஷ்யா | 0 | 8 | 0 |
| இந்தியாவின் குறை பாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை) | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet, ERODE

ரோஜா முத்தையா